Registered as a NewsPaper இலவச பிரதி
விலை ரூபா 10.00
# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
பக்கங்கள்-12
நாதம் 16 திருவள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி-18 03-09-2005 சனிக்கிழமை ஓசை-198


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் திறன்

# சிறிலங்கா அரசாங்கத்திடம் இல்லை!



## இதனை உலகிற்கு உணர்த்தி வருகிறோம்

## புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன்

*"தென்னிலங்கை அரசியல் சமூகம், தமிழ்த்தேசிய இனச்சிக்கலுக்குத் தீர்வுகானாது என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவதில் எமது தேசியத் தலைமை மிகவும் பொறுமையுடன் அவதானமாகச் செயற்பட்டு வருகிறது" இவ்வாறு விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க. வே. பாலகுமாரன் தெரிவித்தார்.*

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னைய நிலைகளிலிருந்து கீழிறங்கி விட்டதாகக் கொழும்பு ஊடகங்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் குறித்து அவர் தமிழ்நெற் இணையத்தளத்திற்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது;

தமிழ்தேசிய இனத்தின் அபிலாசைகளை அரசியல் ரீதியாகச் சர்வதேச சமூகத்திடம் வெளிப்படுத்துகிற நோக்கத்தில் அரசியல் முதிர்ச்சியுடன் நாம் செயற்பட்டு வருகிறோம்.

தமிழ்தேசிய இனச்சிக்கலுக்குத் தீர்வுகாண்கின்ற திறமை தென்னிலங்கையிடம் இல்லை என்பதைச் சர்வதேச சமூகத்திடம் வெளிப்படுத்தி வருகின்றோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் நாம் அக்கறையுடன் இருக்கின்றோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு சனாதிபதி சந்திரிகா விருது!




சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடைத்தங்கல் குடியிருப்புகளை அமைத்துக்கொடுத்தமைக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு சிறிலங்கா சனாதிபதியால் விருது வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இவ்வாறான வீடுகளை அமைத்து வழங்கியமைக்காகவே இவ்விருது கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் வழங்கப்பட்டது.

## தமிழ் தேசியப் பிரச்சினை குறித்த நிலைப்பாட்டை சனாதிபதி வேட்பாளர்கள் தெளிவாக்க வேண்டும்

### தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

தமிழ் தேசியப் பிரச்சினைகள் தொடர்பான நிலைப்பாட்டை இரு பிரதான கட்சிகளின் சனாதிபதி வேட்பாளர்களும் தெளிவுபடுத்த வேண்டும் எனத் தமிழ்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் இது குறித்து கருத்து வெளியிடுகையில்:-

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு இரு வாரங்களினுள் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் தமிழ் தேசியப் பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

இரு பிரதான வேட்பாளர்களும் அவ்வாறு செய்யவில்லையெனில் தனியொரு வேட்பாளரை நிறுத்தவோ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சோதனைச் சாவடியில் அப்பாவித் தமிழர் படையினரால் கைது

### -துப்பாக்கி ரவைகள் வைத்திருந்ததாகக் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதி கொடுவாமடு சிறிலங்கா இராணுவ முன்னணி காவல்நிலைய சோதனைச் சாவடியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசவாசியொருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் என்ற குறிப்பிட்ட இந்நபரிடமிருந்து 11 துப்பாக்கி ரவைகள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக இராணுவம் கூறுகிறது.

மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக இவர் ஏறாவூர் சிறிலங்காப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## 8,000 வாக்காளர் அட்டைகள் நுகேகொடவில் கண்டுபிடிப்பு!

### -பணத்திற்காக வழங்கப்பட்டதாகத் தகவல்

(கொழும்பு)

நுகேகொட நகரத்திலுள்ள கட்டடம் ஒன்றில் இருந்து 8000 வாக்காளர் அட்டைகள் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வாக்காளர் அட்டைகளை நுகேகொடவுக்கு கொண்டு சென்ற முச்சக்கர வண்டிச் சாரதி மற்றும் கட்டடக் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த வாக்காளர் அட்டைகள் போலியானவை அல்ல என்பது அடிப்படை விசாரணைகள் மூலம் அறிய வந்துள்ளது. அவை கட்டண அடிப்படையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல்!

### படகும் சேதமாக்கப்பட்டது

(வடமராட்சி)

வடமராட்சியின் காங்கேசன் துறையை அண்டிய மயிலியதனை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் நேற்றுக் காலை சிறிலங்காப் படையினரால் பிடிக்கப்பட்டு கண்மூடித்தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

பலாலி உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டிப்பகுதியில் வசித்து வந்த மீனவர்கள் இருவரே இவ்வாறு தாக்கப்பட்டவர்களாவர்.

காலைவேளை படகில் இவர்களிருவரும் தொழிலிற்கு சென்றிருந்ததாகவும், அவ் வேளையில் அங்கு டோறாப் படகொன்றில் ரோந்து வந்த கடற்படையினரால் அவர்களது படகு தாக்கி சேதமாக்கப்பட்டதுடன், அவர்களும் பிடிக்கப்பட்டுள்ளனர்.

பிடிக்கப்பட்ட அவர்களிருவரும் கடற்படையினரின் படகில் ஏற்றப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டதுடன் நீண்ட நேரத்தின் பின்னரே கரை திரும்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா படையினர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

### சிப்பாய் காயம்

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினர் மீதான இனந்தெரியாதோரின் தாக்குதல்கள் தொடர்கின்றன. நேற்று முன்தினம் மட்டும் இடம்பெற்ற மூன்று சம்பவங்களில் இராணுவச் சிப்பாயொருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு ஆரையம்பதி சிறிலங்கா அதிரடிப்படை முகாம்மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று நேற்று வாழைச்சேனை, ஏறாவூர்ப்பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிராகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. இதில் இராணுவச் சிப்பாயொருவர் காயமடைந்துள்ளார்.

## வீரச்சாவு

16.09.1994 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுஞ்சேனை என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை -வடிவேல்

(தர்மலிங்கம் -வடிவேல், திருப்பழுகாமம் 01,பெரிய போரதீவு மட்டக்களப்பு)

30.05.1986 அன்று மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர்சிலை சூத்திரதாரிகளிலொருவர் திருமலையில் வெட்டிக்கொலை!

(திருமலை)

திருமலை மாவட்டம் உப்புவெளிப் பகுதியில் வைத்துச் சிங்களவர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் நேற்று வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் திருமலையில் அத்துமீறி புத்தர்சிலை வைக்கப்பட்டதில் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை வரோதய நகரைச் சேர்ந்த 30 அகவையுடைய பிரதீப் குமார என்பவரே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் மீட்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெருமளவான இராணுவத்தினரும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசவிரோதி சுட்டுக்கொலை!

கம்பஹா மாவட்டம் வென்னப்புவவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் தேசவிரோதி கருணா குழுவைச் சேர்ந்தவர் என நம்பப்படும் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கல்முனையைச் சேர்ந்த நகுலேசன் பாரத் (வயது-35) என இவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் "வணிக கைத்தொழில் விவசாய சம்மேளனம்" (Chamber of Commerce,industry & Agriculture ) தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்மேளனத்தில் உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்கான ஒன்று கூடல் 2005. 09. 04 ஆம் நாள் காலை 10. 00 மணிக்கு நிதித்துறை வணிக ஒன்றியப் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. உறுப்பினராக இணைந்துகொள்ள விரும்புபவர்களை, ஆர்வமுடையவர்களை இவ்வொன்று கூடலில் கலந்துகொள்ள வருமாறு அழைக்கின்றோம்.

ஒழுங்கமைப்புக்குழு,
வணிகக் கைத்தொழில் விவசாய சம்மேளனம்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.12666)

## கேள்வி அறிவித்தல்

கிளி. மாவட்டத்தில் உள்ள உலருணவு பெறும் குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களுக்கு உலருணவு விநியோகிப்பதற்குத் தேவையான நாட்டுப்புழுங்கல் அரிசி, முதல்தரமான கிறீன்பிறாண்ட் கோதுமை மாவு ஆகியவற்றை வழங்கக் கூடிய பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களிடமிருந்து பொறிமுத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மாதம் | நாட்டுப்புழுங்கல் அரிசி | கோதுமை மாவு |
|---|---|---|
| 2005 ஒக்டோபர் | 250 மெற்றிக்தொன் | 100 மெற்றிக்தொன் |
| 2005 நவம்பர் | 230 மெற்றிக்தொன் | 90 மெற்றிக்தொன் |
| 2005 டிசம்பர் | 200 மெற்றிக்தொன் | 80 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப் பத்திரத்தினையும், ஆவணங்களையும் 2005.09.16 ஆம் திகதி வரை மாவட்டப் புனர்வாழ்வுச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபரும், மாவட்டக் கேள்விச்சபைத் தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்

(சி.12667)

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சிப் பிரதேசசபை

### மணல் அகழ்வதற்கும் ஏற்றிச் செல்வதற்குமான தடை

எமது பிரதேசத்தின் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் இன்று 03.09.2005 முதல் சகல ஆறுகளிலிருந்தும் ஏனைய மணல் சேருமிடங்களிலிருந்தும் மணல் அகழ்ந்தேற்றுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பிரதேச சபையின் அனுமதியின்றி வாகனங்களில் ஏற்றிச் செல்வதும், வீடுகள், வர்த்தக நிலையங்களில் வைத்து விற்பனை செய்வதும் பூரணமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. சொந்தத் தேவைகளுக்கு மேலதிகமாகக் குவித்து வைத்திருப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

மணல் தேவையுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களைக் கரைச்சிப் பிரதேச சபையில் கையளித்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தங்களுக்குத் தேவையான மணல் கரைச்சி உதவி அரச அதிபரின் பிரதேசத்தில் புதுமுறிப்பு கூட்டுறவு ஒன்றியவளாகம், கோணாவில் சந்தை வளாகம், கந்தபுரம் முருகன் ஆலய வளாகம் ஆகிய இடங்களில் 12.09.2005 முதல் மணலை பெற்றுக்கொள்ளமுடியும்.

மணல் அவசர தேவையுள்ளவர்கள் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் தற்போது சேகரிப்பு மையங்கள் இயங்கும் கல்லாறு முகாம் வளாகம், கல்மடுநகர் மூலிகைத் தோட்ட வளாகம் ஆகிய இடங்களில் ஒரு உழவு இயந்திர சுமை ரூபா 750 வீதம் உடனே பெற்றுக்கொள்ள முடியும்.

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் முருகண்டிப் பகுதியிலிருந்து அப்பிரதேசசபைப் பற்றுச்சீட்டுக்களுடன் மணல் ஏற்றி வருவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

மணல் தேவை கருதி குவித்து வைத்திருப்போர் அது தொடர்பாக அறிவித்து அனுமதி பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இவற்றை மீறுவோர் மீது தண்டம் அறவிடப்பட்டு வாகனமும் தடுத்து வைக்கப்பட்டு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன். நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்.

(சி.12669)

# Vacancy - Immediate
## Field Officer

**The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a highly competent, experienced professional for the role of a Field officer in its Ecosec Department.**

**The candidate should have the following qualifications**

- ☒ Completion of 'A' Level Education. Degree in Social sciences preferred
- ☒ Excellent computer literacy in MS office and in database management
- ☒ Very good spoken and written English and Tamil
- ☒ Working experience with an NGO or an international organization
- ☒ Professional qualification in need assessment

**Core responsibilities include:**

- ☒ Channels all relevant information related to the context in general and specific surroundings.
- ☒ Advises delegate in various fields such as politics, economy, culture, religion, etc.
- ☒ Briefs interlocutors on ICRC activities.
- ☒ Translates documents from English to National language and reverse.
- ☒ In close collaboration with local authorities , conduct Emergency operations assessment when needed and provide adequate recommendations.
- ☒ Assist ECOSEC delegate in designing and implementation of community based programs and livelihood support projects for the most poor people.
- ☒ Assist ECOSEC delegate in the assessment of management skills of community and initiate with District Departments training when required.
- ☒ In close collaboration with local authorities and other NGOs, contribute to the sensitization of target communities in order to help them to make better choices and determine priorities, mobilize resources, request financing and implement and manage livelihood support programs.
- ☒

**Employment Conditions:-**

According to ICRC's National Scale and employment conditions.

Suitable candidates are invited to submit their complete CVs (incl. photocopy of experience certificates) to ICRC's office in Kilinochchi until **Friday, 09th of September 2005.** Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
**Subdelegation Kilinochchi**
**Iraniamadu Junction**
**Kilinochchi**
**Phone: 071 237 56 97**

(சி.12662)

# 5 ஆம் ஆண்டு நினைவில்...

தோற்றம்
15 - 10 - 1976



வீரச்சாவு
03 - 09 - 2000

## மேஜர் செந்தூரன் (கண்ணன்)

இம்ரான் பாண்டியன் படையணி
(யோகராசா ராஜ்குமார்)
உப்பளம்-ஆனையிறவு.

இலட்சிய விடுதலையில் கால் பதித்து
சென்ற செந்தூரனே
காற்றாகி வந்துவிடு நாம்
கல்லறை வாசலில் காத்துநிற்கின்றோம்.

தகவல்:- யோ.குமார் (அண்ணன்)
மாயவனூர்,
வட்டக்கச்சி.

(சி. 12627)

என்றும் உன் நினைவில்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.



# நினைவலைகள்

## வீரவேங்கை மாதவி

நடேசன் அனுஜா (நிசா)
நாவற்காடு-வரணி,
யாழ்ப்பாணம்.

பிறப்பு:- 10-11-1984
வீரச்சாவு:- 03. 09. 2000

கலங்கரை விளக்கானாய் கயவர்க்கோ நெருப்பானாய்
கண்ணான எம் தலைவர் இலட்சியத்தின் விழுதானாய்
காற்றோடு நீ கலந்து கடந்ததம்மா ஆண்டைந்து
கண்ணீரில் கரைகிறது அன்பு வைத்த எம் மனது
களங்கமற்ற கனவோடு காற்றாகிப் போனவரே! உம்
கனவுகள் நனவாகும் கலங்காமல் கண்மலர்வீர்.

இந்நாளில் மாவீரர்களான மேஜர் மாதவன் மாஸ்ரர், கப்டன் சீதை, வீரவேங்கை சிறி, கப்டன் உரவோன், மேஜர் நகுலன் ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

(6682)

குடும்பத்தினர்.

# ஏவுகணை சோதனை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இந்தியா-பாகிஸ்தான் உடன்பாடு

(இஸ்லாமபாத்)

**இந்திய,பாகிஸ்தான் அதிகாரிகள் இடையிலான பேச்சு வார்த்தையில் ஏவுகணை சோதனை தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட இருநாடுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.**

இந்தியா-பாகிஸ்தான் அமைதி முயற்சியின் ஒரு பகுதியாக இரு நாடுகளிற்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. சமீபத்தில் உள்துறை செயலாளர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தை புதுடில்லியில் நடைபெற்றது. இந் நிலையில் இந்திய- பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான இருநாள் கூட்டம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்திய தரப்பில் வெளியுறவு செயலாளர் ஷியாம் சரணும், பாகிஸ்தான் தரப்பில் அந் நாட்டு வெளியுறவுச் செயலாளர் ரியாஸ் முகமது கானும் பேச்சு வார்த்தைக்குத் தலைமை ஏற்று நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் காஷ்மீர், சியாச்சின் இருநாட்டுபொருளாதார ஒத்துழைப்பு உட்பட எட்டு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. மேலும் எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஆகியோர் அமெரிக்காவில் நடக்கும் ஐ.நா.மாநாட்டில் சந்திக்கும் போது பேசவேண்டிய அம்சங்கள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்படவுள்ளது. நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஏவுகணை சோதனை குறித்து ஒப்பந்தம் மேற்கொள்ளவும் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது.

அநேகமாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மூன்றாம் திகதி நடக்கும் இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் ஏவுகணை சோதனைகுறித்து இந்தியா, பாகிஸ்தானுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டத்திற்குப்பின்னர் பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் ரியாஸ் முகமது கான் கூறுகையில், ஏவுகணை சோதனை தொடர்பான வ்ரைபு ஒப்பந்தத்தில் கையெழுத்திட கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று கூறினார்.

இந்திய வெளியுறவு செயலாளர் ஷியாம் சரண் நிருபர்களிடம் கூறுகையில்; ஸ்ரீநகர்-முஷாரபாத் பேருந்துப்போக்குவரத்தில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பது குறித்துப் பேசப் பட்டது. இதேபோன்று கார்கில்-ஸ்கார்டு இடையே பேருந்துப்போக்குவரத்தைத் தொடங்குவது குறித்தும் பேசப்பட்டது என்று கூறினார்.



ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே நடந்த மத திருவிழாவில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இறந்தனர். இதில் இறந்த ஒருவரின் உடலை உறவினர்கள் பெற்று வரும் போது கதறியழும் காட்சி.

## "கற்றினா" காட்டிய கொடூரம்: அமெரிக்க அதிபருக்கு மன்மோகன் ஆறுதல்

(வோஷிங்டன்)

'கற்றினா' சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்கர்களுக்கு ஆறுதல் தெரிவித்து அமெரிக்க அதிபருக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் எழுதியுள்ளார். கடிதத்தில் மன்மோகன்சிங் கூறியுள்ளதாவது; "கற்றினா" சூறாவளியில் சிக்கி அமெரிக்கர்கள் பலர் இறந்துள்ளனர். பலர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் நலம்பெற பிரார்த்திக்கின்றோம். சென்ற ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையில் இயற்கைச்சீற்றத்தின் கொடூரத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம். பாதிக்கப்பட்ட இடங்களில் உடனுக்குடன் மீட்புப்பணிகள் மேற்கொள்வது பெரிய சவாலாக இருந்திருக்கும் என்பதையும் உணர்ந்திருக்கின்றோம் என மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

## தாய்லாந்தில் தீவிரவாதிகள் தாக்குதலால்: 130 பேர் மலேசியாவிற்கு தஞ்சம்

(கோலாலம்பூர்)

தாய்லாந்தின் தென்பகுதியில் சில இடங்களில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதன் எதிரொலியாக,130 இற்கும் மேற்பட்ட தாய்லாந்து முஸ்லிம்கள் மலேசியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தாய்லாந்தில் சில தீவிரவாத அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்பினர் மலாய் மொழி பேசும் முஸ்லிம்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர் நராதிவாட், பட்டானி மற்றும் யாழா மாகாணங்களில் மலாய் மொழி பேசும் முஸ்லிம்கள் அதிகம் வாழ்கின்றனர். இப் பகுதியை குறி வைத்து தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். யாழா மாகாணத்தின் தலைநகரில் முஸ்லிம் ஆசிரியர் ஒருவரை உந்துருளியில் வந்த இருவர் சுட்டுக் கொன்றனர்.

இதேபோல் நராதிவாட் மாகாணத்தில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். இவ்வாறு மலாய மொழி பேசும் மக்கள் அதிகம் வாழும் பகுதியில் தொடர் தீவிரவாத தாக்குதல் நடந்து வருகின்றது. இதையடுத்து அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் அருகில் உள்ள நாடான மலேசியாவிற்கு தஞ்சம் புகத் தொடங்கியுள்ளனர். இதுவரை 130 இற்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு மலேசியாவிற்கு ஓடியுள்ளனர்.

இது குறித்து மலேசிய பொலிசார் கூறியதாவது;

மலேசியாவின் கிலன்தான் பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்து இரண்டு மசூதிகளில் தங்கியிருந்த முஸ்லிம்களை குடியேற்றத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளோம் இவர்களில் ஆண்கள் 64 பேர், பெண்கள் 24 பேர் மற்றும் 43 பேர் குழந்தைகள். வன்முறைச் சம்பவங்களால் தாய்லாந்து முஸ்லிம்கள் மலேசியாவில் அதிகளவில் தஞ்சம் அடைந்து வருவது இதுவே முதல் முறை. தாய்லாந்தில் வன்முறை தொடர்ந்தால் அங்கிருந்து வருவோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தெரிவித்தனர்.

# கற்றினா சூறாவளியாலும், வெள்ளத்தாலும் அமெ.வில் ஆயிரக்கணக்கானோர் பலி!

**-நியூ ஓலியன்ஸ் நகர் 80 சதவீதம் நீரில் மூழ்கியது**

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சூறாவளி காரணமாக ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்க கடலோர பகுதிகளான அலபாமா, மிசிசிப்பி, நியூ ஓர்லியன்ஸ், மேற்கு புளோரிடாவில் கடந்த வாரம் கடுமையான சூறாவளி தாக்கியது. இதில் கடலோரப் பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டன.

மழைநீர் மற்றும் கடல் நீர் நகருக்குள் புகுந்ததால் வீதிகளெங்கும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றன. நியூ ஓர்லியன்ஸ் நகர் 80 சதவீதம் தண்ணீரில் மூழ்கியுள்ளது அந் நகரில் வசித்த மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சம்பவ பகுதிகளை அதிபர் புஷ் விமானத்தில் சென்று பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில்; நாட்டின் மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் இதுவும் ஒன்று. பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்க வருடக் கணக்காகும். முதற்கட்டமாக மின்சாரம் தொலை பேசி, போக்குவரத்தை சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

நியூ ஓர்லியன்ஸ் நகரம் முழுவதும் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடப்பதால் அந்நகரில் உயிருடன் இருப்பவர்களை மீட்பு படையினர் உலங்கு வானூர்தி மூலம் மீட்டு வருகின்றனர். சூறாவளி காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை எவ்வளவு என்பது சரிவர தெரியவில்லை.

இது குறித்து ஓர்லியன்ஸ் நகர மேயர் ராய் நாகின் கூறுகையில்; ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சுகிறோம் என்று தெரிவித்தார்.

பல இடங்களில் இறந்த மனித உடல்கள் தண்ணீரில் மிதக்கின்றன. அவற்றை மீட்புப்படையினர் படகுகளில் சென்று அப்புறப்படுத்தி வருகின்றனர். புயல் காரணமாக சட்டம் ஒழுங்கு சீர் கெட்டு இருக்கிறது. ஆயுதம் ஏந்திய கொள்ளைக்காரர்கள் ஆளில்லாத வீடுகளில் புகுந்து கொள்ளை அடித்து வருகின்றனர். கார்கள் திருடப்படுகின்றன இதைத் தடுக்க 1500 இற்கும் மேற்பட்ட அமெரிக்க பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

லூசியானா, மிசிசிப்பி, அலபாமா ஆகிய நகரங்களில் சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் அந்தப் பகுதிகளில் இன்னமும் மின், தொலைபேசி இணைப்புகள் சீர் செய்யப்படவில்லை மிசிசிப்பி நகரில் மட்டும் குறைந்தபட்சம் 110 பேர் பலியாகி இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# குவைத் எனக் கூறி ஈராக்கில் இறக்கல்

குவைத் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவதாகக் கூறி ஈராக்கிற்கு தொழிலாளர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

ஏனைய நாடுகளில் இருந்து குவைத்தில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறும் வேலை வாய்ப்பு முகவர்கள் இளைஞர், யுவதிகளை ஈராக் நாட்டிற்கு அனுப்பி வருகின்றனர்.


இதனால் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் சிறிலங்கா உட்பட பல்வேறு நாட்டு பிரஜைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈராக்கில் மிகவும் பதற்றமான சூழல் காணப்படுவதால் இவ்வாறு ஏமாற்றப்படும் இளைஞர், யுவதிகள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.



'கற்றினா' சூறாவளியினாலும், தொடர்ந்த வெள்ளப் பெருக்காலும் பாதிக்கப்பட்டோர் மீட்பு குழுவின் வருகைக்காக கூரை மீது காத்துக் கொண்டிருக்கின்றனர்.



அமெரிக்காவில் சூறாவளி தாக்குதலில் புகையிரதத்தில் எடுத்துச் செல்லப்பட்ட சரக்குக் கொள்கலன்கள் பறந்து போய் விழுந்திருக்கும் காட்சி.



அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளியால் வீடு இழந்து அகதியான சோகத்தில் ஒரு தாய் தனது ஒன்றரை வயது மகனைக் கட்டியணைத்து கண்ணீர் விடும் காட்சி.

# அவசரகால நிலையைப்பயன்படுத்தி இராணுவம் யுத்த சூழலை ஏற்படுத்துகிறது

## -கண்காணிப்புக்குழுவிடம் இனியவன் முறையீடு

**தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள அவசரகால நிலையைப் பயன்படுத்தி மீண்டும் யுத்த சூழ்நிலையை சிறிலங்கா இராணுவத்தினர் ஏற்படுத்தி வருவதாக மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளார்.**

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

மன்னாரில் அண்மைக் காலமாக படையினரின் சுற்றிவளைப்புக்கள்; தேடுதல்கள், கைதுகள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுவருவதாகவும் யுத்த நிறுத்த கண்காணிப் புக் குழுவினிடம் தெரிவித்த இனியவன் படையினர் தமது நிலைகளை வலுப்படுத்தி யுத்தத்திற்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருவது மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.



நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்திற்குள்ளான 21 இடைத்தங்கல் முகாம்களிலுள்ள ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான பால்மா கடந்த புதனன்று வழங் கப்பட்டது. இதில் ஆறு மாதத்திற்குட்பட்ட குழந்தைகள் 49 பேரும், ஆறு மாதத்திலிருந்து ஒருவயது வரையான குழந்தைகள் 141 பேரும் பயன்பெற்றுள்ளனர்.

# த.தே.தொலைக்காட்சி பார்வையகம் புதுக்குடியிருப்பில் திறந்து வைப்பு

தமிழீழ தேசியத்தொலைக்காட்சி பார்வையகம் கடந்த புதன்கிழமை மாலை 4.40 மணிக்கு புதுக்குடியிருப்பு மேற்கு சனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் திறந்துவைக் கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை லண்டனில் இருந்து வருகைதந்த தி.பாஸ்கரன், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியினை புதுக் குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். மண்ட பத்திற்கான பெயர்ப்பலகையினை க.திருநாவுக்கரசு திரைநீக்கம் செய்து வைத்தார்.மண்டபத்தினை மணலாறு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா நாடா வைவெட்டித் திறந்து வைத்தார்.

வரவேற்பு உரையினை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவராசா நிகழ்த்தினார். அறிமுக உரையினை தமிழீழ தேசியத் தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் கருணாகரன் நிகழ்த்தினார். சிறப்புரையினை மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். நிலையமானது இரவு எட்டு மணி தொடக்கம் ஒன்பது மணிவரை மக்களின் பார்வைக்காக திறந்திருக்கும். இப்பார்வையகத்துக்கான நிதியுதவியினை லண்டனில் வசிக்கும் திருநாவுக்கரசு பாஸ்கரன் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள், போராளிகள் கலந்துகொண்டனர். (08)

# மீன்பிடிப்படகுகளுக்காக எடுத்துவரப்பட்ட எரிபொருள் பொலிசாரால் பறிமுதல்

தலைமன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மீனவர்களின் படகுகளுக்கான 2,100லீற்றர் எரிபொருள் எடுத்துச் செல்லப்பட்டபோது அதை சிறிலங்கா பொலிசார் பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கூட்டுறவுச் சங்க பாரவூர்தியில் இந்த எரிபொருள் எடுத்துச் செல்லப்பட்டபோது வழி மறித்த சிறிலங்காபொலிசார் உரிய ஆவணங்கள் இன்றி எரிபொருள் எடுத்துச்செல்லப்படுவதாககூறி கூட்டுறவுச்சங்க ஊழியர் இருவரை கைது செய்தனர். 2,100லீற்றர் டீசலையும் பறிமுதல் செய்து கொண்டனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட ஊழியர்கள் இருவரும் மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி என் எம்எம். அப்துல்லா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டனர். இருவரையும் சொந்தப் பிணையில் நீதிபதி விடுதலை செய்தார். இன்று இருவரும் நீதிமன்றில் ஆஜராகவும் உத்தரவிட்ட நீதிபதி பறிமுதல் செய்யப்பட்ட எரிபொருளை பாதுகாத்து வைக்கும்படியும் உத்தர விட்டார்.

தலைமன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 85மீன்பிடிப் படகுகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது. இதன் மூலம் 250 மீனவக் குடும்பங்கள் பயனடைந்து வந்தன.

தற்போது 2,100 லீற்றர் எரிபொருள் பறிமுதல் செய்யப்பட்டதால் கூட்டுறவுச்சங்கம் பெரும் இன்னலை எதிர்நோக்கியுள்ளது. அப்பகுதி கடற்றொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

## பாடசாலை அபிவிருத்திக்கு கலைநிகழ்வு

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் தேசிய பெண்கள் கல்லூரியின் அபிவிருத்தியினை கருத்தில் கொண்டு கலை நிகழ்வொன்று செவ்வாயன்று இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பல இசை நிகழ்களும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (18)

# போரினால் பாதிக்கப்பட்ட முல்லை.மக்களுக்கு "நேப்" திட்டத்தினால் வீடமைப்பு

## -பிரதித்திட்டப்பணிப்பாளர் சிவஜெயந்தன்

(முல்லைத்தீவு)

போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு இரண்டரை இலட்சத்தில் வீடமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தினை வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் (நேப்) நடைமுறைப்படுத்தி வருவதாக முல்லை.மாவட்ட வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் சி.சிவஜெயந்தன் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று கிராமங்கள், புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபர்பிரிவில நான்கு கிராமங்கள், ஒட்டுசுட்டான் பிரதேச உதவி அரசஅதிபர் பிரிவில் நான்கு கிராமங்கள், துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் நான்கு கிராமங்கள், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் நான்கு கிராமங்களுமாக மொத்தம் 19 கிராமங்களில் இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும், மொத்தம் 512 வீடுகளுக்கு தற்போது முதலாம், இரண்டாம்,மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு கட்டட வேலைகள் நடைபெற்றுவருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் பராமரிப்பு நிதிக்காக புத்தகங்கள் அன்பளிப்பு

லண்டனில் வாழ்ந்து வரும் யாழ். வாசியான திருமதி தனபாக்கியம் பாலசிங்கம் தான் எழுதி வெளியிட்டுள்ள "இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும்" எனும் நூலின் ஒரு தொகுதியினை போரினால் பாதிப்புற்ற சிறுவர்களின் பராமரிப்பு நிதிக்கென அன்பளிப்புச் செய்துள்ளார். "அறிவமுது" பொத்தக சாலைகளில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கும் இப் புத்தகங்களின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி பாதிப்புற்ற சிறுவர்களின் பராமரிப்பிற்கென வழங்கப்படும்.

# சான்றிதழ் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

முல்லை.மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் மாவட்டச்செயலகத்தில் கணினி பயிற்சிகளை முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதலும், தையல் பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது.

கணினி பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்கள் அனைவரும் ஒட்டுசுட்டானில் உள்ள பொருண்மிய மதியுரையக மாவட்டச் செயலகத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (05)



கிளிநொச்சி பொதுச்சந்தைப்பகுதியில் அகற்றப்படாத நிலையிலுள்ள குப்பைகூழங்கள். (படங்கள்:-சோதி)

# நிகொட் திட்டப்பணிகளை மீளாய்வு செய்ய நடவடிக்கை

(முல்லை)

நிகொட் திட்டத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் திட்டங்களை மீளாய்வு செய்யும் நோக்குடன் நிகொட் திட்டப் பணிப்பாளர் நேரடியாகஅத்திட்டங்களை பார்வையிடவுள்ளார் என மாவட்ட நிகொட் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐந்தாம் திகதி வருகைதரும் அவர், அன்றைய தினம் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களையும் அழைத்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (20)

# பொதுநோக்கு மண்டபம் திறந்து வைப்பு

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பிரதேசத்திலுள்ள பெரிய புளியங்குளம் கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் திறந்து வைக் கப்பட்டுள்ளது.

28ஆம் திகதி காலை 11.30 மணியளவில் பெரியபுளியங்குளம் கிராம முன்னேற்ற சங்கத்தலைவர் க.பால சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மங்கல விளக்கினை பெரியபுளியங்குளம் கிராம அலுவலர் சிதம்பரநாதன், முருகன் ஆலயக்குருக்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக்கொடியினை மாங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றினார். தொடர்ந்து பொது நோக்கு மண்டபத்தினை முல்லை மாவட்ட நிர்வாக சேவையைச் சேர்ந்த செந்தூரன் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார். அலுவலகத்தினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாசினி கந்தையா நாடாவினை வெட்டித் திறந்து வைத்ததை அடுத்து கருத்துரைகளை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர், மாங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், நிர்வாக சேவையைச் சேர்ந்த செந்தூரன் ஆகியோர் வழங்கினர். (05)

# நியாப்திட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்து

முல்லை மாவட்ட நியாப் திட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட மைய்க்கிராமங்களின் வேலை தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை அன்று உள்ளூராட்சி அபிவிருத்தி பிரதேசசபை ஆணையாளர் ஜே.எம். ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாங்குளம் கிடப்பட்டமுறிப்பு, திருமுறி கண்டி, கற்குவாரி, பழம்பாசி, பெரியஇத்திமடு, சின்னசாளம்பன், சிவநகர், புலிமச்சிநாதகுளம, தண்டுவான்,நீதிபுரம் ஆகிய கிராமங்களின் மாதர்சங்கங்களின் கிராமஅபிவிருத்திசங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டனர். (05)

# உந்துருளி -ஈருருளி மோதல் இளம் பெண் காயம்

மல்லாவி வடகாடு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது; மல்லாவியிலிருந்து மாங்குளம் நோக்கி வந்த உந்துருளியுடன் வடகாடு முன்பள்ளியிலிருந்து வீதிக்குவந்த ஈருருளி விபத்துக்குள்ளானது. ஈருருளியில் வந்த வடகாடு கதிரவன் குடியிருப்பைச் சேர்ந்த சோமசுந்தரம் கிருஸ்ணவேணி (வயது-20) என்பவரே காயங்களுக்குள்ளாகி மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (05)

# விசேட செயலணியின் செயற்பாட்டுக்கு பல்வேறுதரப்பினரும் பாராட்டு

**(யாழ்ப்பாணம்)**

**நல்லூர்ஆலயஉற்சவகாலத்தில் விசேடசெயலணியினர் மற்றும் யாழ்.பிரதேச அரசியல்துறையினர் ஆற்றிவரும் பணிகளுக்கு பொதுஅமைப்புக்கள், இந்து சமயப்பேரவை, யாழ்.மாநகரசபைஆணையாளர் ஆகியோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்**

கடந்த வருடத்தில் பெருந் தொகையில் பொலிசார் நல்லூர் உற்சவகாலத்தில் பணியாற்றிய பொழுதும் குற்றச்செயல்கள், களவுகள்.மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகள் அதிகளவு இடம்பெற்றன. ஆனால் இப்பொழுது முற்றுமுழுதாக பாதுகாப்புபணியிலும் ஏனையகடமையிலும் விசேட செயலணியின் தொண்டர்களே ஈடுபட்டு இருக்கின்றனர். மற்றும் யாழ்.பிரதேசஅரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன்இப்பணிகளை நேரடியாகஒழுங்கமைப்பதிலும்கண்காணிப்பதிலும் ஈடுபட்டுள்ளதால் திருவிழாக் காலங்களில்நடைபெற்றுவரும் குற்றச் செயல்கள்வெகுவாககுறைந்திருப்பதாகஅவர்கள்தெரிவித்துள்ளனர். (28)

# வெளிவாரி மாணவரின் நலன்கருதி நூல் நிலையங்கள் அமைக்குக!

*-இலங்கைதிறந்த பல்கலைஅதிகாரிகளிடம் மாணவர் கோரிக்கை*

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு மற்றும்வன்னிப் பிரதேச வெளிவாரிப்பட்டப் படிப்புமாணவர்கள் பயன் பெறக் கூடியவிதத்தில் நூலகங்களை அமைத்துத்தரவேண்டும் என்று யாழ்.மாவட்டத்தில்வெளிவாரியாக பட்டப்படிப்பை தொடர்ந்துவரும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த இலங்கை திறந்த பல்கலைக்கழக அதிகாரிகள்மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்தபோதே யாழ்.மாவட்ட மாணவர்கள் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசங்களிலும் வெளிவாரியாகப் பட்டப் படிப்பைதொடரும் மாணவர்கள் பயன்பெறக்கூடிய விதத்திலான நூல் களைக்கொண்ட நூலகங்கள் எதுவும் இல்லாதுள்ளன.

இதனால்இப்பகுதி வெளிவாரி மாணவர்கள் தமது பாடவிதானம் சம்பந்தப்பட்டநூல்களை பெற்றுக் கொள்வதிலும்அறிவுத்தேடலுக்கான உசாத்துணைநூல்களைப் பெற்றுக் கொள்வதிலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் பாடவிதானம் சம்பந்தப்பட்ட நூல்கள் சில வற்றை இங்குபெறமுடியாத நிலையுமுள்ளது.

இவற்றைஎல்லாம்சுட்டிக் காட்டியே வெளிவாரிமாணவர்கள் பயன் பெறத் தக்கநூல்நிலையங்கள்அமைக்கப்பட வேண்டும்என்றுகோரப்பட்டுள்ளது. (33)

## பெற்றுக்கொள்ளவும்

இளவாலை-யாழ்.சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி ஒன்றில் சாரதியினால் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு சண்டிலிப்பாய் சிற்றூர்தி சங்கத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# உதவு தொகை வழங்கல்

(வலி-மேற்கு)

சுனாமியால் பாதிக்கப்பட்டு யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியில் வேலைவாய்ப்புப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பயிற்சிக்கால உதவு தொகைப் பணம் எதிர்வரும் ஏழாம் திகதி வழங்கப்படவுள்ள தென்று கல்லூரி அதிபர் என்.யோகராஜன் அறிவித்துள்ளார்.

ஒட்டுவேலை, மரவேலை, மேசன் வேலை, வீட்டுமின்சார நீர்க்குழாய் பொருத்துதல் போன்ற பயிற்சி நெறிகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கே பயிற்சிக்கால உதவுதொகை வழங்கப்படவுள்ளது.

இவ்வேலை வாய்ப்புப் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றமாணவர்கள் கல்லூரி அலுவலக நேரத்தில் வந்து தமக்கான உதவுதொகைக் கொடுப்பனவுகளைப்பெற்றுச்செல்லலாம் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (37)

# நல்லை குமரன் 13 ஆவது ஆண்டு நூல் வெளியிடப்பட்டது

(நல்லூர்)

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தை யொட்டி யாழ்ப்பாணம் மாநகர சபையின் இந்து சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லை குமரன் நூலின் 13 ஆவது ஆண்டு நூல் யாழ் மாநகர ஆணையாளர் கலாநிதி.க.குணராசா தலைமையில் நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது

இந் நிகழ்வில் மங்கல விளக்கினை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் பேராசிரியர் க.சண்முகதாசும் ஏற்றிவைத்தனர்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் மற்றும் பருத்தித்துறை சாரதா ஆச்சிரமத்தலைவர் சித்ரூபானந்தாவும் வழங்கினர். நூலின் முதல் பிரதியை பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியிட்டுவைக்க, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய நிர்வாகத் தினர் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் மாவை ஆதீனகர்த்தா மகாராஜ ஸ்ரீ சு.து சண்முகநாதக்குருக்கள் கௌரவிக் கப்பட்டார்.

ஆய்வுரைகளை கலாநிதிசு.சண்முகதாஸ்,யாழ்பல்கலைக்கழக தமிழ் துறைவிரிவுரையாளர் சு.குமரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். (41)

# யாழ். இல் உள்ளூராட்சி வாரத்தில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுப்பு

(வலி- மேற்கு)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தயாராகியிருக்கின்றன.

இவ் உள்ளூராட்சி வாரத்தில் குறித்த பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகளின் எல்லைப் பிரதேசங்களிற்குட்பட்ட கிராமங்களின் பல்வேறு செயற்பாடுகள் நடைபெறவுள்ளன என்றும் சம்பந்தப்பட்ட சபைகளின் செயலாளர்கள் அறிக்கைகள் விடுத்திருக்கின்றனர்.

இந்த வகையில் சனசமூக நிலையங்களுக்கிடையில் சிறந்த தரத்தில் இயங்கும் நிலையங்களைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கல், முன்பள்ளி மாணவர்களுக்கிடையே பல்வேறு கலைநிகழ்வுகள் மற்றும் கண்காட்சிப்போட்டிகளை நடாத்துதல், சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு நூல்களை வெளியிடுதல், மரங்களை நாட்டுதல், நீர்நிலைக்கு குளோரின் இடல், மருத்துவமனைகள், ஆலயங்கள், பாடசாலைகள், சந்தைகள், மயானங்கள், வீதிகள் போன்ற பொது இடங்களில் சிரமதானப்பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (37)

# மண்ஏற்றிய உழவியந்திரம் இனந்தெரியாதோரால் எரிப்பு

(தென்மராட்சி)

கைதடியில் நேற்றுமுன்தினம் இரவு சட்டவிரோதமண் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

கைதடி நவீல்ட்பாடசாலை அருகில் இரவு1.30மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மண் ஏற்றப்பட்டநிலையில்வந்துகொண்டிருந்த உழவு இயந்திரமேமணலுடன் சேர்த்து எரித்து அழிக்கப்பட்டுள்ளது. (28)

# சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டம்; வலிமேற்கு பி.சபை நடைமுறைப்படுத்த முடிவு

(வலி.மேற்கு)

வலி.மேற்கு பிரதேசத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டமொன்று வலி-மேற்குப் பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந் நடவடிக்கைக்கு வசதியாக தற்போது பிரதேசத்திலுள்ள அரைக்கும் ஆலைகள், தொழில் நிறுவனங்கள் குறித்த விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் பொதுச்சுற்றுச்சூழலுக்கு ஒவ்வாத நடவடிக்கைகளை இயன்றளவு மாற்றத்திற்கு கொண்டு வந்து பொதுமக்களுக்கு நல்ல தொரு சூழலைஉருவாக்கிக் கொடுக்க முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது. (37)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் தென்மராட்சி கல்வி வலயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில்- பெரும் வளப் பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன் கவலை தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை தற்போது தனியாருக்குச் சொந்தமான வீடொன்றிலேயே தற்காலிகமாக இயங்கிவருகிறது. இத் தனியார் கட்டடமானது அலுவலகப் பாவனைகளுக்கு ஏற்ற விதத்தில் அமைக்கப்படாது தனியாரின் பாவனைக்குரிய வீடொன்றின் அமைப்பில் உள்ளதால் இங்கு அலுவலக செயற்பாடுகளை நிர்வகிப்பதிலும் அதிகாரிகளுக்கான தனியான அலுவலகங்களை வழங்குவதிலும் பல சிக்கல்கள் உள்ளன.

இதைவிட இங்கு உரியதளபாடவசதிகளோ, ஊழியர்களோ இல்லாதிருப்பதினால் நிர்வாக செயற்பாடுகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிர்வாகச்சிக்கல்களை தீர்ப்பதற்காகதென்மராட்சிவலயக்கல்விப் பணிமனைக்குத் தனியான கட்டடம் அமைக்கப்படுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (33)

# பத்துக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு தென்மராட்சியில் மின்சாரம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாதங்களில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் நாவற்குழி, தச்சன் தோப்பு, கோயிலாக்கண்டி, மறவன்புலோ, நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டம், கைதடி மத்தி குமரநகர், கல்வயல் புலுட்டைப்பிள்ளையார் கோயிலின் ஒரு பகுதியும், மட்டுவில் வடக்கு மாணாவளை மோகனதாஸ் சனசமூகநிலை பகுதியும், கைதடி கிழக்கு கல்லாகப் பகுதிக்கும் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் மின்சாரம் இல்லாத பிற இடங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (28)

# வீதிகள் அகலமாக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் விபத்துக்களை தடுக்கலாம்

*–யாழ். அரச அதிபர் கே. கணேஷ்*

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வீதிகள் அகலமாக்கப்படுவதன் மூலம் எதிர் காலத்தில் விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களை குறைத்துக் கொள்ளலாம் என அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் பிரதானமான ஐந்துவீதிகள் அகலப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும முதலில் மூன்று வீதிகளே அகலப்படுத்தப்படவுள்ளன.

குடாநாட்டில் வீதிகள் அகலப் படுத்தல் மற்றும் புனரமைப்பு செய்தல்திட்டத்தின்கீழ்யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்-கண்டிவீதி, யாழ்ப்பாணம்-பண்ணை வீதி யாழ்ப்பாணம்-காரை நகர் வீதி, யாழ்ப்பாணம்-பலாலிவீதி ஆகிய வீதிகள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் முதலில் யாழ். பருத்தித் துறை, யாழ்ப்பாணம்-காரை நகர்வீதி யாழ்-பண்ணைவீதி ஆகிய வீதிகள் அகலப்படுத்தி புனரமைப்பு செய்யப் படவுள்ளது.

எதிர்கால நன்மையைக் கருத்திற்கொண்டே இந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வாறு வீதிகள் அகலப்படுத்துவதன் மூலம் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல்களையும்அதிகரிக்கும் வீதி விபத்துக்களையும் குறைத்துக் கொள்ளலாம். இதேவேளை வீதிகள் அகலப் படுத்தும்போது பொதுமக்கள் போதிய ... வி செய்யவேண்டுமென ...ம்தெரிவித்தார் (சீ)

# புதிய தபால் அத்தியட்சகரை நியமிக்கும்படி கோரிக்கை

யாழ்மாவட்ட தபாலலுவலகத்துக்கு உடனடியாகபுதியதபால் அத்தியட்சகரை நியமிக்க வேண்டுமென பொது மக்கள் மற்றும் அமைப்புகளிடம் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இங்குபணியாற்றி வந்த தபால் அத்தியட்சகர் ஓய்வு பெற்று விட்டதால் இவரது இடத்திற்கு புதியவர் ஒருவரை நியமிக்கும் படியும், பல மாதங்களாக வெற்றிடமாக உள்ள வடபிராந்திய தபால் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தரை நியமிக்கும் படியும் கோரிக்கைகள் மக்களிடம் இருந்து விடுவிக்கப்பட்டு இருக்கின்றன. (28)

# மருத்துவவிடுதி புனரமைப்பிற்கு அரச அதிபர் நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி நகர வைத்தியசாலையின் ஆண்கள் மருத்துவவிடுதியை மீள் திருத்தங்களுடன் சில அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ள யாழ். அரசாங்க அதிபரினால் 13 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.கடந்த காலங்களில் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுவிடுத்தவேண்டுகோளை ஏற்று உடனடியாகதிருத்த வேலைகளை மேற்கொள்ளஇந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# பொருளாதாரக் கட்டுப்பாடுகளை மீறி அச்சடிக்கப்படும் பண நோட்டுக்களால் ஏற்படும் விளைவுகள்

சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் 5700 ஆயிரம் கோடிரூபா பண நோட்டுக்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இது பொருளாதாரத்தின் ஆணிவேராக அல்லது முதுகெலும்பாக விளங்கும் நிதிச்சந்தையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பாதகமான விளைவை ஏற்படுத்தப்போகிறது. இது நாட்டில் சுற்றோட்டத்திலுள்ள பணநிரம்பலின் அளவை அதிகரித்து பணவீக்கம் ஏற்பட்டு பொருட்களுக்கான விலைகளை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரிக்கச் செய்யவல்லதாகும். இதன் தொடர்தாக்கங்கள் மக்களின் வாழ்க்கைத்தரத்தையே குறைக்கப்போகிறது.. மக்களை மேலும் வறுமைநோக்கித் தள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

சனாதிபதித்தேர்தல் இவ்வாண்டு இறுதியில் நடக்கவிருக்கும் நிலையில் சிறிலங்கா ஆட்சியாளர் 5700 ஆயிரம் கோடிரூபா பணநோட்டுக்களை உரிய பொருளாதாரக் கட்டுப்பாட்டு சட்டதிட்டங்கள், ஒதுக்கீடுகளுக்கு, அமையாது தன்னிச்சையாக அச்சிட்டு வெளியிட்டுள்ளதாக ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதியமைச்சருமான பந்துலகுணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார். அரசாங்கத்தின் இச் செயற்பாடானது நாட்டுமக்களைப் படுகுழியில் தள்ளும் செயற்பாடாகும் என்றும் பந்துலகுணவர்த்தன தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சரான இவர் தனது குற்றச்சாட்டினை கடந்த 23ஆம் திகதி கொழும்பில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கின்றார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் மிகவும் வெளிப்படையான முறையில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த மிகப்பாரதூரமான விடயம் குறித்து அரசாங்கம் இதுவரை பதிலளிக்காது மௌனம் காத்து வருகிறது.

ஆளுங்கட்சியின் மீது எதிர்க்கட்சியின் தேர்தல் காலத்து குற்றச்சாட்டாக இதை எதிர்காலத்தில் சிலர் கூறிக்கொள்ள முற்படக் கூடும். ஆனால் அந்தக்கோணத்தில் இதைப்பார்க்கமுடியாது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளரான மகிந்தராஜபக்ஷ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தன்னை ஆதரித்தால் அதன் தலைவருக்கு முன்னூறு மில்லியன் ரூபா வழங்கத் தயாராகவுள்ளதாகவும் பேரம் பேசல் நடைபெறுவதாகவும் செய்திகள் கூறின.

மேலும் தேர்தல் பிரச்சாரங்களுக்கு நூறு கோடிரூபாவரை செலவிட மகிந்தராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார். தேர்தல்கால செலவீனங்களுக்கும், சிறிய கட்சிகளுக்கும் கையூட்டல் கொடுத்து பேரம்பேசி ஆதரவைப்பெற்றுக் கொள்வதற்கும் ஆளும்தரப்பினருக்குப் பெரிய நிதித்தேவையுள்ளதையும் மறுக்கமுடியாதுள்ளது.

மேலும் தேர்தல் காலத்தில் மிகப் பாரதூரமான பெரிய நிதிமோசடி குறித்த குற்றச்சாட்டுக்கு ஆளுங்கட்சியினர் காரணம் கூற முற்படாது மௌனம் சாதித்துவருகின்றனர். இவற்றின் பின்னணியில் பார்க்கும் போது பந்துலகுணவர்தனவின் குற்றச்சாட்டை எதிர்க் கட்சியின் தேர்தல் கால சாதாரண குற்றச் சாட்டாகப் பார்க்கமுடியாது.

அரசாங்கம் மக்கள் மீது எந்தக் கரிசனையுமின்றி நாட்டின் பொருளாதாரப் பாதிப்புக்கள் குறித்து எந்தக் கவலையுமின்றி தமது சொந்த நலனுக்காக 5700 கோடிரூபா பணநோட்டுக்களை அச்சடித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தின் இவ்வாண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கிடைக்கக்கூடிய மொத்தவருமானத்தில் சுமார் ஆறில் ஒருபகுதியாக இந்தத் தொகை உள்ளது. ஆதலால் இது ஒருசிறிய தொகையோ அல்லது சாதாரண நிதிமோசடி நடவடிக்கைக்குள் அடக்கிப்பார்க்கக்கூடியதோ அல்ல. மக்களின் பசித்தவயிற்றோடு விளையாடும் செயல். கள்ளப்பண நோட்டுக்கள் நாட்டின் பொருளாதாரத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துமோ அதே தாக்கத்தையே இப் பண நோட்டுக்களும் ஏற்படுத்தும். அதாவது நாணயத்தாள்களின் அச்சுத்தரம் சரியானதாக இருக்கும். ஆனால் இது ஒரு சட்டமுறைப் பணமாக இருக்கமாட்டாது. இந்தப்பணத்திற்கு கணக்காய்வோ, கணக்குக்காட்டவேண்டிய தேவையோ அரசாங்கத்திற்குக் கிடையாது. ஏனென்றால் இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்ட கணக்கினூடாக பெறப்படுவதல்ல. இது ஒருவகையில் பொதுமக்களிடமுள்ள பணத்தை திருடுவதற்கு ஒப்பான செயலாகும். ஏனென்றால் சுற்றோட்டத்திலுள்ள பணத்தின் நிரம்பல் இந்த அச்சடிக்கப்பட்ட பண நோட்டுக்களால் அதிகரிக்கும் பொழுது பொதுமக்களின் கையிலிருக்கும் பணத்தின் பெறுமதி குறைந்துவிடுகிறது. அதாவது பொதுமக்களின் கையிலுள்ள பணத்தின் கொள்வனவுவலு குறைவடைந்துவிடுகிறது. இதனால் பொதுமக்கள் ஒரு சேவையைச்செய்வதற்கு முன்னரைவிட கூடுதலான பணத்தைச்செலுத்த வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுகின்றார்கள். இந்தத்தாக்கமானது நாட்டின் பொருளாதாரத்தில் தொடங்கி மக்களின் வாழ்க்கைச் செலவுவரை தொடர்தாக்கத்தை ஏற்படுத்தி நாட்டு மக்களை மேலும் வறுமை நிலைக்குத் தள்ளுகின்றது.

மக்கள் தம்மை உருக்கி பொருளாதார அபிவிருத்திக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தமது தொழிற்துறை மூலம் அதிகரிக்க எத்தனித்தாலும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நிதிச்சந்தையில் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளும் மோசடிகளால் மக்களின் பொருளாதாரம்/வாழ்க்கைத்தரம் சாண் ஏற முழம் சறுக்கும் நிலையாகவே உள்ளது.

சனாதிபதித்தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தமது வெற்றிகுறித்த அவநம்பிக்கை நிலையிலுள்ள தற்போதைய ஆட்சியாளர் எரிகிறவீட்டில் பிடுங்கியது மட்டும் இலாபம் என்ற அடிப்படையிலும் இந்தப்பண நோட்டு அச்சடித்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எது எப்படியிருந்தாலும் சிங்கள ஆட்சியாளரின் அரசியல் நாகரிகம் பொருளாதாரப்பண்புகளை அவர்களது அரசியல் வரலாற்றினைப் புரட்டிப் பார்த்து நோக்கினால் இது தொடர்ந்து செல்லும் ஒரு நடவடிக்கையாகவே காணலாம்.

**கெல்மன்**

# இ.தொ.காங்கிரஸ், மு.காங்கிரசுடன் ஐ.தே.கட்சி தொடர்ந்து பேச்சு

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அக்கட்சிகளுடன் ஐக்கிய தேசியக்கட்சி பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடனும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமுடனும் ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியதலைவர்கள் இதுவரை உத்தியோகபூர்வமற்ற முறையில் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில்விக்கிரமசிங்கவின் தெளிவான நிலைப்பாட்டிற்கமைய எதிர்வரும் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவது சம்பந்தமாக எந்தவித பிரச்சினையும் இல்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரசும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இந்தச் சந்திப்புக்களின் போது தெரிவித்திருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் மலையகப் பிரச்சினை மற்றும் கிழக்கில் முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்தும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள அவ்விரு கட்சிகளும் தீர்மானித்துள்ளன என்றும் ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறுமுகம் தொண்டமானுடனும், ரவூப் ஹக்கீமுடனும் வரும் நாட்களில் நடைபெறவுள்ள உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்வார் எனவும் ஐக்கிய தேசியக்கட்சினர் தெரிவித்தனர்.

# ரத்னசிறியின் பாதுகாப்பு பிரிவு வாகனம் மோதி சிறுவன் பலி

பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்னசிறிவிக்கிரம நாயக்கவின் பாதுகாப்புப் பிரிவினரின் வாகனம் மோதியதில் 14வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்

நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலை களுத்துறை கட்டுக்குருந்தையில் நடந்த விசேட அதிரடிப் படையினரின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரும்பிய பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பாதுகாப்புப் பிரிவினரின் வாகனமே சிறுவன் மீது மோதியுள்ளது.

பிரதிப் பாதுகாப்பமைச்சர் செல்கையில் ஏனைய வாகனங்களின் போக்குவரத்தை நிறுத்தி அவரின் வாகனம் செல்வதற்கு வழி விடப்பட்டுள்ளது. பிரதிப் பாதுகாப்பமைச்சரின் வாகனமும் மற்றொரு வாகனமும் சென்றதையடுத்து வீதியோரத்தில் நின்றிருந்த இந்தச் சிறுவன் தனது ஈருருளியுடன் பாதையின் குறுக்கே வந்த போது பின்னால் வந்த அமைச்சரின் பாதுகாப்பு பிரிவினரின் வாகனத்தில் மோதுண்டு சம்பவ இடத்திலேயே பலியானார். மொறட்டுவ பொலிஸ்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# வாழைச் சேனையில் துப்பாக்கிச்சூடு சிறி. இராணுவச் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் காயமடைந்து பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கிண்ணியடி இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் எஸ். சிறிவர்த்தன என்பவரே காயமடைந்துள்ளார்.

கிண்ணியடி முகாமிலிருந்து மீராவோடைப் பக்கம் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் இரண்டு நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் பதில் துப்பாக்கிச் சூடு செய்த போதிலும் யாருக்கும் சேதம் ஏற்பட்டதாக தகவல் எதுவும் இல்லை.

# ஐ.தே. கட்சி, சு.கட்சி இணங்கிப்போக அஸ்கிரிய,மல்வத்த பீடாதிபதிகள் வலியுறுத்து

இருபிரதான அரசியல் கட்சிகளும் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தி அறிக்கை ஒன்றை விடுத்தால் ஏனைய பிரிவுகள் அமைதி படையும் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தர கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜேரத்ன, அஸ்கிரிய பீடாதிபதியைச்சந்திக்கச் சென்ற போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைகள் போன்று முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பில் இருபிரதான கட்சிகளும் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொண்டால் பிரச்சினைகளைத் தீர்ப்பது இலகுவாகும் என்றும் மகாநாயக்கர் கூறினார். மல்வத்தை மகாநாயக்கர் திப்பட்டுவாவே சுமங்கல தேரரும் இருபிரதான கட்சிகளினதும் ஒற்றுமையின் அவசியம் குறித்து விளக்கியுள்ளார்.

# நான் சனாதிபதியானால் குறுகிய காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## -ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் சீர்குலைவதற்கு முதன்மையான காரணம் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையேயாகும். இன, மத, அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு சனாதிபதித் தேர்தலில் என்னை வெற்றியடையச் செய்தால் மிகக் குறுகிய காலத்தில் இன நெருக்கடிக்கு பேச்சுவார்த்தை மூலமாக நிரந்தர அரசியல் தீர்வு காணப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு இன்று பலத்த சவால்களை எதிர் கொண்டிருப்பதாகவும், இதிலிருந்து மீட்சி பெறுவதற்கு நிரந்தர சமாதானமும், உறுதியான பொருளாதாரத் திட்டமும் அவசியமென வலியுறுத்திய விக்கிரமசிங்க, இன நெருக்கடிக்கு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணப்படும் எனவும், ஒரு போதும் தேசம் துண்டாட இடமளிக்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில் றுகுனு மக்கள் கட்சி, ஐ.தே.கட்சியுடன் இணைந்து கொண்ட வைபவத்தில் கடந்த புதன் கிழமை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

# புலிகள் மீது அரசு குற்றச்சாட்டு; த.கூட்டமைப்பு அதிருப்தி

பாரிய யுத்த நிறுத்த மீறல்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தது குறித்து தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இது குறித்துப்பேசிய தமிழ்தேசியக்கூட்டமைப்பின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா, இது தொடர்பாக பாராளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்த அனுமதிக்கப்பட்டால் உரிய விளக்கத்தை கூட்டமைப்பு தாக்கல் செய்யும் என்றார்.

# புவி வெப்பமடைதலும் விஞ்ஞானிகளின் எச்சரிக்கைகளும்

புவி அதிக வெப்பமடைந்து வருவது தொடர்பாக அண்மையில் பலர் அச்சத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆரம்ப காலம் தொட்டு புவி எவ்வாறு வெப்பமடைந்து வருகின்றது என்பதையும் எவ்வாறு அறிந்து கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.

முதன் முதல் 1827 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானியான பின் பப்டிஸ் பிரையர் வெளியிட்ட தகவலில் புவியில் காபனீரொட்சைட் அதிகரிப்பதால் சூரியனின் வெப்பக்கதிர்கள் புவியைத் தாக்குவது அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார். பின்னர் 1896 ஆம் ஆண்டு செவினட் அரகனியஸ் புவியில் நிலக்கரி பரவலை அதிகரிப்பதால் காபனீ ரொட்டை அதிகரிப்பதாகத் தெரிவித்தார்.

1958 இல் அமெரிக்காவின் சார்ள்ஸ் டேவிட் புவியில் சேரும் காபனீரொட்சைட்டின் வருடாந்த அளவு அதிகரிப்பதாகக் கூறினார். 1970 ஆம் ஆண்டு அமெரிக்க, ஐரோப்பிய விஞ்ஞானிகள் கூட்டாக விடுத்த அறிக்கையில் புவிவெப்ப மடைதலுக்கு ஏற்ற வேறு வாயுக்கள் ஏற்படுவதாக கண்டுபிடிப்பின் மூலம் தெரிவித்துள்ளனர். அவர்கள் காபனீ ரொட்சைட்டை விட மீதென், புல்வோ ரோ, புளுவோரோ, நைட்ரிர் ஒட்சைட் என்பனவும் புவியின்மேற்பரப்பில் உண்டாவதாக கூறியுள்ளனர்.

இந்தத் தகவல்களையடுத்து 1988 ஆம் ஆண்டிலும் 92 ஆம் ஆண்டிலும் வெப்பநிலையை ஆராயவென உலக விஞ்ஞானிகள் குழு ஒன்று நிறுவப்பட்டது. பின்னர் 1997 ஆம் ஆண்டு அந்தக் குழு புவியில் வெப்பத்தை அதிகரிக்கும் வாயுக்களை வெளியிடும் தொழிநுட்ப நாடுகளிடம் இதனை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டது. 2001 ஆம் ஆண்டு சர்வதேச காலநிலை விஞ்ஞானிகள் சங்கம் புவிவெப்ப மடைதல் அதிகரிப்பதாக எச்சரிக்கை விடுத்தது. உலகில் காபனீரொட்சைட்டை வெளியிடும் பிரதான நாடாக அமெரிக்கா விளங்குகிறது. முன்னர் இந்த தொழிநுட்பத்தை நிறுத்துமாறு விடுக்கப்பட்ட அறிவுறுத்தலை நிராகரித்து அது தமது உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார். எனினும் தற்போது அதனை உணர்ந்துள்ள அமெரிக்கா அதனை மீள்பரிசிலனை செய்யவுள்ளது. அடுத்து 2002 ஆம் ஆண்டும் புவியின் மேற்பரப்பு வெப்பமடைதல் தொடர்பாக மீண்டும் எச்சரிக்கை விடுக்கப் பட்டது. அதுபோல் 2003இல் மியுனிச் காப்புறுதி நிறுவனமும், ரஷ்யாவும் எச்சரிக்கைகளை விடுத்த வண்ணமுள்ளன.

# பின்லாந்து

பின்லாந்து ஒரு பால்டிக் கடலோர நாடு. இது ரஷ்யப் பேரரசின் பகுதியாயிருந்து 1917 இல் சுதந்திரக் குடியரசானது. பின்லாந்தின் பொருளாதாரம் ஊசி இலை மரவகை (Conifer) காடுகளைச் சார்ந்துள்ளது. இங்கு 65 சதவீதமான நிலப்பரப்பில் இவ்வகைக்காடு காணப்படுகிறது. இங்கு காகிதத்தயாரிப்பு, காகிதக் கூழ் தொழிற்சாலைகள் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. கப்பல் கட்டுதல், உலோகங்கள், துணிஆலைகள், தோல், இரசாயனத்தொழில்கள் போன்றவை பிற தொழில்களாகும், இங்கு 2000 இற்கு மேற்பட்ட ஏரிகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| தலைநகர் | — | ஹெல்ஸிங்கி |
| நாட்டின்பரப்பளவு | — | 337,032 சதுர கி.மீ |
| மொழி | — | பின்னிஷ் |
| எழுத்தறிவு | — | 99% |
| நாணயம் | — | மார்க் |

# மரபணுமுறையின் மூலம் ஊனமுற்ற நாய்களுக்கு சிகிச்சை

மனிதன் ஒருவன் சுதந்திரமாக நடமாடுவதற்கு கால்கள் முக்கியமானவையாகும். விபத்தொன்றின் போது கால்களை இழந்தால் அல்லது செயற்படாது விட்டால் ஒருவர் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவார்.

அதனை நிவர்த்தி செய்வதற்கு காலங்காலமாக மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள் பலவுள்ளன. அவற்றில் ஒரு ஆய்வு நாய்களில் மேற்கொளப்பட்டது. அது கேம்பிறிஜ் பல்கலைக்கழக கால்நடை வைத்தியர்களான நிக்ஜெஜ்றி,றொபின் பிராங்ளின் என்ற இருவரும் மேற்கொண்ட ஆய்வுகளாகும்.

அவர்கள் விதிவிபத்தில் சிக்கி ஊனமுற்ற ஒன்பது நாய்களுக்கு சிகிச்சையளித்ததன் மூலம் இந்த ஆய்வை மேற்கொண்டனர். இதன் போது எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு அவர்களுக்கு கிடைத்தது. பின்பக்கம் இருகால்களுடன் இயங்க முடியாதிருந்த நாய்கள் இந்த சிகிச்சையின் பின்னர் பின்னங் கால்களை அசைக்கவும் உடலின் பாரத்தை தாங்கிக் கொள்ள முடிவதும் அவதானிக்கப் பட்டது.



இந்த ஆய்வு தற்போதும் நடைபெற்று வருவதால் மனிதனுக்கு இதுசாத்தியமாகுமா என்பது பற்றி 2007 ஆம் ஆண்டளவிலேயே இது உறுதிப்படுத்தப்படும் என கூறப்படுகிறது. இதனை மனிதனில் ஆய்வு செய்வதாயின் மேலும் பல வழிமுறைகளைக் கையாள வேண்டியிருக்கும் என்பது மேற்படி ஆய்வாளர்களின் கருத்தாகும்.

பல்வேறு மரபணுக்களைச் சேமித்து தற்போது ஆய்வுகள் மேற்கொளப்படுகின்றன. அதன்படி இறந்த நாயின் மண்டையோட்டில் இருந்து பெறப்பட்ட மரபணுவை நாயின் பாதிப்புற்ற இடத்தில் ஊசி மூலம் செலுத்தப்பட்ட பின்னர் அதில் மாற்றம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

எனினும் இந்த ஆய்வு எலிகள் போன்ற சிறு பிராணிகளில் மேற்கொள்ள முடியாது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் மேற்படி மரபணுக்குப்பதிலாக வேறு மரபணுவைப் பயன்படுத்த முடியுமா என்பது பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. காரணம் நாய்களில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் சில நாய்கள் வலிப்பு நோய்க்குள்ளானமை தெரியவந்தமையாகும்.

எவ்வாறாயினும் நோயுற்ற 48 மணித்தியாலங்களுக்குள் மேற்படி ஊசி மருந்தை ஏற்ற வேண்டியிருப்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆய்வுக்குள்ளான நாய்கள் சுமார் இரண்டு மாதகாலத்துக்கு பின்னர் குணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# உடல் எடை சாதாரணமாக இருந்தாலும் இருதய நோய் வரலாம்

உடல் எடை சாதாரணமாக உள்ள காரணத்துக்காக ஒருவருக்கு இருதய நோய் ஆபத்து இல்லை என சொல்லி விட முடியாது. ஏனெனில் ஒல்லியான நபரின் நடுப்பகுதியிலும் (இடுப்பு) கூட அதிகமான அளவு கொழுப்பு தேங்கி இருக்கலாம். மறைவாக காணப்படும் இத்தகைய கொழுப்பு நீரிழிவு மற்றும் இருதய நோய்களை தூண்டி விடும் வாய்ப்பை நிராகரிப்பதற்கு இல்லை. இதனை மெட்டாலிபோலிக் சின்ட்ரோம் என்று குறிப்பிடுகிறோம்.

இத்தகைய பிரச்சினை யார் யாருக்கெல்லாம் இருக்கும் என்பது குறித்து மருத்துவர்கள் கூறியுள்ள சில விஷயங்கள்

1. இடுப்புச்சுற்றளவு 40 இஞ்ச் மற்றும் அதற்கு அதிகமாக உள்ள ஆண்கள், பெண்களாக இருந்தால் 35 இஞ்ச் மற்றும் அதற்கு மேல்
2. இரத்த கொழுப்பான டிரைகிளிசரைடுகள் அளவு 150 milligrams/ deciliter அல்லது அதை விடக்கூடுதலாக
3. எச். டி. எல். கொலஸ்ட்ரோல் ஆண்களில் 40 milligrams/deciliter இற்கும் குறைவாக .. பெண்களில் 50 milligrams/deciliter இற்கும்குறைவாக.
4. இரத்த அழுத்தம் 130 / 85 அல்லது அதை விட கூடுதலாக..
5. இரத்த சர்க்கரை அளவு 110 milligrams/ deciliter அல்லது அதை விட கூடுதலாக..

# கடல் வாழ் உயிரினத்திலிருந்து புற்று நோய்க்கு மருந்து

கடல்வாழ் நுண்ணுயிரியான ஏக்டினோமைசிட்டில் இருந்து பெறப்படும் நுண்ணிய பொருளை எல்.அஸ்பரஜினேசிற்கு புற்று நோய்க்கிருமிகளை எதிர்க்கும் தன்மை இருக்கின்றதா?என்பது குறித்த ஆய்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தக் கடல் வாழ் நுண்ணுயிரிகளிடம் இருந்து நொதிகள் ,புரதங்கள் மற்றும் உயிர் வேதிப் பொருட்கள் பெறப்படுகின்றன. உப்புத்தன்மையைத் தாங்கிக் கொண்டு வாழும் கடல் நுண்ணுயிரிகளிடம் இருந்து பெறப்படும் இந்தப் பொருட்களும் பல்வேறு வகையான உப்புகளை தாங்கக் கூடிய சிறப்பை பெற்றுள்ளன.

நம் மனித இரத்தத்தின் பெரும்பகுதி திரவப் பொருளாக பிளாஸ்மாவால் ஆனது. இந்தத் திரவம் உப்புத்தன்மையை கொண்டுள்ளது.

புற்று நோய்க்கலங்களை கொல்லும் தன்மை படைத்த எல் அஸ்பரஜினேசிகளை உற்பத்தி செய்ய விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். இந்த கடல் வாழ் நுண்ணுயிரிகளிடம் இருந்து பெறப்படும் புற்றுநோய்க்கான மருந்து மற்றைய புற்று நோய்க்கான மருந்துகளைப் போன்று பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்துவதில்லை என்பது குறிப்பித்தக்கதாகும்.

# 15 இலட். டொலர் பெறுமதியான கைக்கடிகாரம்



இரத்தினக்கற்களால் அலங்கரிக்கப்பட்டு சித்திர வேலைகளுடன் கூடியகணினி மயப் படுத்தப்பட்ட கைக் கடிகாரங்களை ஜப்பானிய நிறுவனம் தயாரித்து விற்பனைக்கு விட்டுள்ளது. இதன் பெறுமதி 15 இலட்சம் அமெரிக்க டொலராகும்

# திராட்சைப்பழம்

எல்லாவயதினருக்கும் ஏற்றதாக இருப்பது திராட்சைப்பழம். இதனைத் தினமும் சாப்பிட்டுவந்தால் கொழுப்புச் சத்து கட்டுக்குள் இருக்கும் இரத்த அழுத்தத்தையும் திராட்சைப்பழம் கட்டுக்குள் கொண்டுவரும். காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் உடலில் இருக்கும் விஷத் தன்மை கொண்ட பொருட்களை வெளியேற்றும் சக்தியும் திராட்சைப்பழத் திற்கு உண்டு.

தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலியால் அவதிப்படுகிறவர்கள் திராட் சைப்பழச்சாற்றைத் தினமும் பருகிவர வேண்டும். பருகிவந்தால் நாளடைவில் தலைவலி குணமாகிவிடும். திராட்சைப்பழம் குறித்தகாலத்தில் அதிகமாகக் கிடைக்கும். அப்போது அதனை அதிகமான அளவில் வாங்கி சாறுபிழிந்து போத்தலில் அடைத்து வைத்துக்கொள்ளுங்கள். இதனை பல் முளைக்கும் பருவத்தில் இருக்கும் குழந்தை களுக்குத் தினமும் கொடுத்து வரவேண்டும். கொடுத்துவந்தால் பல்முளைக்கும் பருவத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு சாதாரணமாக ஏற்படும் நோய்கள் எதுவும் ஏற்படாது. மலச்சிக்கல் ஏற்படும் குழந்தைகளுக்கும் இரத்தம் குறைவாக இருக்கும் குழந் தைகளுக்கும் திராட்சைப் பழச்சாறு தினமும் கொடுத் துவந்தால் மலச்சிக்கல் சரியாகிவிடும். இரத்தமும் அதிகமாக உருவாகும்.

சிறுநீரகம் தொடர்பான நோய்கள் இப்போது அதிகரித்து வருகின்றன. இந்த நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் திராட்சைப்பழத்திற்கு இருப்ப தால் இது தொடர்பான நோய் இருப்பவர்கள் திராட்சைப் பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும்.

தற்போதைய உணவு பழக்க வழக்கம் பலரையும் சமிபாட்டுக் கோளாறு கொண்டவர்களாக ஆக்கிவிட்டது. சமிபாட்டில் ஏற்படும் அனைத்து கோளாறுகளையும் தீர்க்கும் சக்தி திராட்சைப்பழத்திற்கு இருக்கிறது. அதனால் சமிபாட்டுக் கோளாறு கொண்டவர்கள் தினமும் திராட்சைப் பழம் சாப்பிட்டுவர வேண்டும்.

குழந்தைகளுக்கு திராட்சைப்பழத்தை அப்படியே கொடுக்கமுடியாது. அவர்களுக்கு சுடுநீரில் உலர்ந்த திராட்சைப்பழத்தைப்போட்டு பிழிந்தெடுத்தநீரைக் கொடுக்க வேண்டும்.

இதயத்தைப்பலப்படுத்தும் சக்தி திராட்சைப்பழத்திற்கு அதிகமுண்டு திராட்சைப் பழத்தை தினமும்சாப்பிட்டு வந்தால் இதய வலியைக் கட்டுப்படுத்த முடியும். இதயத் துடிப்பை சீர்படுத்தி விடவும் முடியும்.

கறுப்பு,சிவப்பு,பச்சை நிறங்களில் திராட்சைப்பழம் உண்டு. இவைகளில் சிவப்பு திராட்சையிலேயே அதிகமான அளவு சத்து இருக்கிறது. உடலுக்குத் தேவையான வைரஸ் மற்றும் பக்டீரியாக்களை அழிக்கும் சக்தி திராட்சை சாறுக்கு இருக்கிறது. திராட்சைசாறு தினமும் பரு[illegible]ந்தால் உடலில் நோய் [illegible]க்தி அதிகரிக்கும்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

### சீட்டிழுப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/சா/4886 திரு.பொன்னு தம்பையா.
யா/சா/4913 திரு.தம்பையா நாகலிங்கம்.
யா/சா/4925 திரு.சின்னையா கணபதிப்பிள்ளை.
யா/சா/4930 திரு.கந்தையா குலசேகரம்பிள்ளை.
யா/சா/4932 திரு.காசிப்பிள்ளை பொன்னுத்துரை.
யா/சா/4939 திரு.முதலி விநாசி.
யா/சா/4942 செல்வி.எலிசபெத் செல்வரட்ணம்.
யா/சா/4944 திருமதி.ஞானபூபதி சண்முகம்.
யா/சா/4953 திருமதி.பாரிப்பிள்ளை செல்லையா.
யா/சா/4961 திருமதி.மாரியம்மா பொன்னையா.
யா/சா/4970 திரு.தம்பையா வேலுப்பிள்ளை.
யா/சா/4985 திருமதி.நல்லம்மா முருகேசு.
யா/சா/4986 திரு.சின்னன் கணபதிப்பிள்ளை.
யா/சா/4987 திரு.பெருமாள் செல்லையா.
யா/சா/4990 திரு.கந்தையா சின்னத்தம்பி.
யா/சா/4996 திரு.இளையதம்பி இராசையா.
யா/சா/5005 திரு.சின்னட்டி சின்னவன்.
யா/சா/5008 திரு.கந்தன் மகாலிங்கம்.
யா/சா/5040 திரு.ஆறுமுகம் ஏகாம்பரம்.
யா/சா/5043 திருமதி.செல்லம்மா கிட்டினன்.
யா/சா/5054 திருமதி.தங்கம்மா வேலுப்பிள்ளை.
யா/சா/5061 திரு.ஞானப்பிரகாசம் இன்னாசிமுத்து.
யா/சா/5064 திரு.சின்னத்தம்பி கதிரவேலு.
யா/சா/5066 திரு.செல்லையா ஐயம்பிள்ளை.
யா/சா/5074 திருமதி.சேதுப்பிள்ளை சிதம்பரநாதர்.
யா/சா/5113 திரு.சின்னத்தம்பி சுந்தரம்.
யா/சா/5134 திருமதி.வள்ளியம்மை சிதம்பரநாதர்.
யா/சா/5135 திரு.வன்னித்தம்பி கணேசமூர்த்தி.
யா/சா/5160 திரு.தம்பிஐயா விக்ரர்மாசில்லா இராசரத்தினம்.
யா/சா/5185 திரு.கிறகோரி சவரிமுத்து.
யா/சா/5193 திரு.கதிரித்தம்பி வேலுப்பிள்ளை.
யா/சா/5195 திரு.வல்லி கதிர்காமு.
யா/சா/5209 திரு.கந்தப்பு வீரகத்தி.
யா/சா/5211 திரு.கூளையன் பெரியதம்பி.
யா/சா/5214 திரு.சரவணமுத்து குமாரவேலு.
யா/சா/5245 திருமதி.கதிராசிப்பிள்ளை கந்தையா.
யா/சா/5272 திரு.வீரவாகு பெருமாள்.
யா/சா/5277 திரு.முருகன் அண்ணாமலை.
யா/சா/5284 திருமதி.நேசரத்தினம் கந்தையா.
யா/சா/5326 திரு.நாகமுத்து வல்லிபுரம்.
யா/சா/5328 திரு.கந்தையா கார்த்திகேசு.
யா/சா/5331 திரு.சரவணமுத்து ஆறுமுகம்.
யா/சா/5332 திரு.சங்கரப்பிள்ளை தம்பிமுத்து.
யா/சா/5348 திரு.சின்னப்பு கதிரவேலு.
யா/சா/5349 திருமதி.காமாட்சி சின்னையா.
யா/சா/5365 திருமதி.திரவியம் கந்தையா.
யா/சா/5376 திருமதி.றோசலின் யோசேவ்.
யா/சா/5379 திரு.ராமலிங்கம் குலசிங்கம்.
யா/சா/5401 திரு.வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை.
யா/சா/5403 திரு.முருகன் செல்லத்துரை.
யா/சா/5417 திருமதி.சின்னம்மா சாந்தலிங்கம்.
யா/சா/5430 திரு.முத்துத்தம்பி ஏரம்பு.
யா/சா/5438 திருமதி.சமுத்திரவியமலர் இரத்தினராசா.
யா/சா/5442 திருமதி.தெய்வானைப்பிள்ளை கந்தையா.
யா/சா/5447 திரு.வைத்திலிங்கம் சின்னராசா.
யா/சா/5455 திரு.சுப்பிரமணியம் சோமநாதன்.
யா/சா/5462 திருமதி.சரஸ்வதி தில்லையம்பலம்.
யா/சா/5463 திரு.தம்பு செல்வவினாயகம்.
யா/சா/5464 திரு.சின்னப்பு மாணிக்கம்.
யா/சா/5465 திரு.பொன்னையா சிதம்பரப்பிள்ளை.
யா/சா/5472 திரு.வீரவாகு நாகலிங்கம்.
யா/சா/5506 திரு.சின்னத்தம்பி கணபதி.
யா/சா/5519 திருமதி.மேரிசெல்வமணி கந்தப்பு.
யா/சா/5535 திரு.கந்தையா கதிர்காமு.
யா/சா/5546 திரு.சின்னத்தம்பி வேலுப்பிள்ளை.
யா/சா/5562 திரு.தில்லைநடேசன் முருகதாசன்.
யா/சா/5587 செல்வன்.வல்லிபுரம் அருமைநாயகம் ஜெயபாலன்.
யா/சா/5601 திருமதி.இராசமணி முருகேசு.
யா/சா/5603 திரு.டேவிட் நல்லையா தங்கத்துரை.
யா/சா/5611 செல்வி.பஞ்சலட்சுமி வாமதேவன்.
யா/சா/5621 திருமதி.செல்லம்மா நடராசா.
யா/சா/5634 திரு.சித்தர் கந்தையா.
யா/சா/5652 செல்வி.சிறீதேவி செல்லையா.
யா/சா/5656 திரு.பண்டாரி வேலுப்பிள்ளை.
யா/சா/5659 திருமதி.சரஸ்வதி வடிவேல்.
யா/சா/5663 திருமதி.பொன்னம்மா இளையதம்பி.
யா/சா/5672 திருமதி.பொன்னுப்பிள்ளை மார்க்கண்டு.
யா/சா/5673 திரு.தம்பையா சங்கரப்பிள்ளை.
யா/சா/5674 திரு.கந்தையா சின்னப்பா.
யா/சா/5692 திரு.நடராசா அருளையா.
யா/சா/5693 திரு.சின்னத்துரை இரத்தினசிங்கம்.
யா/சா/5696 திருமதி.முத்து வீரகத்தி.
யா/சா/5704 திரு.கணபதி சின்னராசா.
யா/சா/5706 திரு.சங்கரன் பாலன்.
யா/சா/5717 திரு.வல்லிபுரம் சுப்பையா.
யா/சா/5719 திருமதி.கமலம் சின்னத்தம்பி.
யா/சா/5727 திரு.சின்னத்தம்பி இராமலிங்கம்.
யா/சா/5729 திரு.சோமசுந்தரம் இரத்தினசபாபதி.
யா/சா/5735 செல்வி.நாகமுத்து சுப்பர்.
யா/சா/5751 திரு.சபாபதி செல்லையா.
யா/சா/5773 திருமதி.நல்லம்மா சுப்பிரமணியம்.
யா/சா/5791 திரு.வல்லிபுரம் சுப்பிரமணியம்.
யா/சா/5794 திரு.இளையதம்பி அம்பலவாணர்.
யா/சா/5798 திருமதி.சின்னப்பிள்ளை கதிர்காமர்.
யா/சா/5802 திரு.கிட்டிணர் வேலாயுதர்.
யா/சா/5859 திருமதி.தெய்வானைப்பிள்ளை செல்லையா.
யா/சா5868 திரு.வீரகத்தியார் சிவப்பிரகாசம்.
யா/சா/5886 திருமதி.சேதுப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/சா/5891 திரு.சிற்றம்பலம் குமாரசாமி.
யா/சா/5894 திரு.கதிரன் சின்னத்துரை.
யா/சா/5908 திரு.சுவாமிநாதர் சிவபாதசுந்தரம்.
யா/சா/5909 திரு.கந்தையா பொன்னையா.
யா/சா/5927 திருமதி.மீனாட்சி கதிர்காமர்.
யா/சா/5940 திரு.கதிர்காமு முருகேசு.
யா/சா/5941 திரு.நாகன் ஆள்வான்.
யா/சா/5951 திரு.வேலாயுதன் வீரகத்தி.
யா/சா/5985 திரு.ஞானமூர்த்தி ஏகாம்பரம்.
யா/சா/5986 திரு.சின்னர் ஐயாத்துரை.
யா/சா/5996 திரு.கந்தன் மாணிக்கம்.
யா/சா/5999 திரு.வல்லிபுரம் தம்பிராசா.
யா/சா/6034 திரு.சின்னத்தம்பி தருமலிங்கம்.
யா/சா/6049 திரு.சவரணமுத்து வினாசித்தம்பி.
யா/சா/6055 திரு.பொன்னையா சின்னையா.
யா/சா/6057 திருமதி.வள்ளிப்பிள்ளை சின்னப்பு.
யா/சா/6079 திரு.கதிரன் வயிரமுத்து.
யா/சா/6081 திரு.இன்னாசிமுத்து வில்லியம்லோறன்ஸ்.
யா/சா/6086 திருமதி.அன்னமுத்து தம்பிமுத்து.
யா/சா/6087 திரு.கந்தையா சுப்பிரமணியம்.
யா/சா/6131 திருமதி.தங்கம்மா கோவிந்தபிள்ளை.
யா/சா/6136 திரு.வயிரமுத்து இரத்தினம்.
யா/சா/6183 திரு.முத்தர் சின்னத்தம்பி.
யா/சா/6213 திரு.வேதவனம் குமாரசாமி.
யா/சா/6246 திரு.கணபதி ஐயாத்துரை.
யா/சா/6252 திரு.விஸ்வலிங்கம் இராமசாமி ஜெயரத்தினம்.
யா/சா/6269 திருமதி.பொன்னம்மா சின்னத்துரை.
யா/சா/6279 திரு.குணரத்தினம் ஜேம்ஸ்குணசீலன்.
யா/சா/6310 திருமதி.நாகம்மா செல்லத்துரை.
யா/சா/6317 திருமதி.மாணிக்கம் கணபதி.
யா/சா/6326 திருமதி.நாகம்மா பொன்னன்.
யா/சா/6332 திருமதி.அன்னம்மா இரத்தினம்.
யா/சா/6337 திரு.வைத்திலிங்கம் தம்பிஐயா.
யா/சா/6340 திரு.செல்லப்பா முத்தையா.
யா/சா/6342 திரு.தியாகராசா செல்லத்துரை.
யா/சா/6354 திரு.இராமு கதிரவேலு.
யா/சா/6363 திருமதி.சிதம்பரம் சுப்பிரமணியம்.
யா/சா/6383 திரு.சின்னப்பு வினாயகமூர்த்தி.
யா/சா/6386 திரு.வேலுப்பிள்ளை கதிரவேலு.
யா/சா/6389 திருமதி.பராசக்தி கார்த்திகேசு.
யா/சா/6413 திரு.அருணாசலம் இராமநாதன்.
யா/சா/6436 திரு.நமசிவாயம் இராமலிங்கம்.
யா/சா/6442 திரு.முருகேசு மார்க்கண்டு.
யா/சா/6444 திருமதி.சின்னம்மா கதிர்காமத்தையன்.
யா/சா/6445 திரு.சின்னவி தம்பையா.
யா/சா/6469 திரு.கனகசபை முத்துலிங்கம்.
யா/சா/6471 திரு.கதிரவேலு நாகராசா.
யா/சா/6495 திருமதி.பசுபதி செல்லன்.
யா/சா/6521 திரு.கதிரவேலு கந்தையா.
யா/சா/6549 திருமதி.தவமணி அரசரத்தினம்.
யா/சா/6550 திரு.சின்னப்பொடி முருகேசு.
யா/சா/6553 திரு.தம்பு செல்லத்துரை.
யா/சா/6562 திருமதி.சேதுப்பிள்ளை பொன்னையா.
யா/சா/6566 திரு.முத்துத்தம்பி பொன்னுத்துரை.
யா/சா/6568 திரு.முருகன் கதிரவேலன்.
யா/சா/6583 திருமதி.நாகம்மா நன்னித்தம்பி.
யா/சா/6586 திரு.செல்லமுத்தர் குமாரசுவாமி.
யா/சா/6589 திரு.சின்னத்தம்பி திருநாவுக்கரசு.
யா/சா/6609 திரு.சுப்பர் நல்லதம்பி.
யா/சா/6616 திருமதி.சின்னம்மா கனகன்.
யா/சா/6620 திரு.இராமலிங்கம் தம்பையா.
யா/சா/6622 திரு.கார்த்திகேசு சுப்பையா.
யா/சா/6631 திரு.கந்தையா கணேஸ்.
யா/சா/6643 திருமதி.பொன்னி கதிர்காமு.
யா/சா/6648 திருமதி.மனோன்மணி பொன்னுத்துரை.
யா/சா/6672 திருமதி.மகேஸ்வரி குருசாமி.
யா/சா/6676 திரு.மொறிஸ்அலோசியஸ் பொன்ராசா.
யா/சா/6691 திரு.சின்னப்பு பிள்ளையினார்.
யா/சா/6694 திரு.வைத்திலிங்கம் சின்னராசா.
யா/சா/6697 திருமதி.செல்லம்மா வைத்திலிங்கம்.
யா/சா/6705 திருமதி.டெய்சிதேவமலர் கிருபைரத்தினம்.
யா/சா/6728 திரு.கதிரேசு நல்லையா.
யா/சா/6762 திரு.செல்லப்பா பாலசுந்தரம்.
யா/சா/6768 திரு.இராமநாதன் மன்மதராஜன்.
யா/சா/6775 திரு.சடையன் கந்தன்.
யா/சா/6781 திருமதி.இலச்சுமி செல்லப்பா.
யா/சா/6790 திரு.சின்னையா செல்லத்துரை.
யா/சா/6795 திருமதி.இராசபூபதி மாணிக்கவாசகர்.
யா/சா/6799 திரு.வேலுப்பிள்ளை வாமதேவன்.
யா/சா/6800 திருமதி.அமிர்தபவானி துரைரத்தினம்.
யா/சா/6813 திரு.ஆண்டி வெள்ளையன்.
யா/சா/6814 திரு.நமசிவாயம் ஐயாத்துரை.
யா/சா/6815 திரு.எஸ்தாக்கி அகஸ்ரின்.
யா/சா/6827 திருமதி.வள்ளிமுத்து கணபதிப்பிள்ளை.
யா/சா/6833 திரு.முத்தையா இரத்தினம்.
யா/சா/6848 திரு.இராமசாமிக்குருக்கள் செல்லத்துரைஐயர்.
யா/சா/6861 திரு.செல்லப்பா கனகசபை.
யா/சா/6868 திரு.சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/6877 திருமதி.திரேசம்மா இன்னாசிமுத்து.
யா/சா/6885 திருமதி.விவேகவதி யோகரட்ணம்.
யா/சா/6920 திரு.சின்னையா சோமசுந்தரம்.
யா/சா/6942 திரு.சின்னக்குட்டி மாணிக்கம்.
யா/சா/6986 திரு.கதிரேசு நாகநாதி.
யா/சா/7001 திருமதி.பாரிப்பிள்ளை செல்லத்துரை.
யா/சா/7003 திருமதி.நாகரட்ணம் மார்க்கண்டு.
யா/சா/7011 திருமதி.செல்லமுத்து சரவணமுத்து.
யா/சா/7040 திரு.சுப்பையா கந்தையா.
யா/சா/7059 திரு.செல்லையா கதிரவேலு.
யா/சா/7068 திரு.மூர்த்தி மகேஸ்வரன்.
யா/சா/7096 திருமதி.தங்கச்சியம்மா துரைசிங்கம்.
யா/சா/7101 திரு.தொமிங்குமுத்து கபிரியேல்.
யா/சா/7104 திரு.கணபதிப்பிள்ளை அருணாசலம்.
யா/சா/7110 திருமதி.செசிலியம்மா பத்மநாதன்.
யா/சா/7134 திருமதி.நாகம்மா இராமலிங்கம்.
யா/சா/7138 திரு.தாமோதரம்பிள்ளை சபாரத்தினம்.
யா/சா/7142 திருமதி.செல்லாச்சி பண்டாரி.
யா/சா/7143 திரு.தம்பிராசா சிங்கராசா.
யா/சா/7164 திருமதி.இலட்சுமி காசிப்பிள்ளை.
யா/சா/7176 திரு.சின்னையா செல்லத்துரை.
யா/சா/7181 திரு.செல்லையா மாணிக்கம்.
யா/சா/7182 திருமதி.சிவக்கொழுந்து இராசசிங்கம்.
யா/சா/7201 திரு.அன்னப்பிள்ளை தம்பிப்பிள்ளை.
யா/சா/7213 திரு.இளையப்பா சட்டநாதர்.
யா/சா/7225 திருமதி.ஜெயலட்சுமி பத்மநாதன் பெணடிக்.
யா/சா/7230 திரு.சோமசுந்தரம் அருளம்பலம்.
யா/சா/7241 திருமதி.சிவபாக்கியம் சுப்பிரமணியம்.
யா/சா/7248 திருமதி.மகேஸ்வரி அரியநாயகம்.
யா/சா/7257 திரு.நாகமுத்து தருமலிங்கம்.
யா/சா/7259 திரு.சின்னத்தம்பி ஆறுமுகம்.
யா/சா/7274 திருமதி.சேதுப்பிள்ளை செல்வம்.
யா/சா/7278 திரு.ஐயம்பிள்ளை சிதம்பரப்பிள்ளை.
யா/சா/7280 திருமதி.சின்னம்மா கந்தன்.
யா/சா/7294 திருமதி.சின்னம்மா கணபதி.
யா/சா/7299 திருமதி.விசாலாட்சி இராமலிங்கம்.
யா/சா/7305 திரு.முருகன் நாகன்.
யா/சா/7309 திரு.முதலி இராமன்.
யா/சா/7310 திரு.நமசிவாயம் சின்னத்துரை.
யா/சா/7312 திருமதி.வள்ளியம்மை சங்கரன்.
யா/சா/7313 திரு.வெள்ளையன் முருகேசு.
யா/சா/7317 திரு.வேலாயுதம் கந்தையா.
யா/சா/7325 திரு.ஆறுமுகத்தான் பொன்னன்.
யா/சா/7349 திரு.வல்லி கட்டையன்.
யா/சா/7352 திரு.சரவணை சின்னத்தம்பி.
யா/சா/7364 திரு.முத்தையா கிருஸ்ணசாமி.
யா/சா/7379 திருமதி.யோகரத்தினம் சண்முகலிங்கம்.
யா/சா/7382 திரு.ஆறுமுகம் கந்தையா.
யா/சா/7389 திருமதி.முத்துப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/7394 திருமதி.நாகமுத்து சுப்பிரமணியம்.
யா/சா/7417 திருமதி.அன்னமுத்து வீரகத்தி.
யா/சா/7419 திரு.வீரகத்தி முருகையா.
யா/சா/7422 திரு.வேலாயுதர் கந்தசாமி.
யா/சா/7434 திரு.சின்னப்பிள்ளை சங்கரன்.
யா/சா/7440 திரு.சுப்பன் நாகன்.
யா/சா/7442 திருமதி.அன்னபூரணம் கந்தையா.
யா/சா/7449 திரு.ஐயாத்துரை கேதீஸ்வரன்.
யா/சா/7450 திரு.கணபதி கதிரன்.
யா/சா/7453 திரு.சின்னததம்பி சுப்பையா.
யா/சா/7484 திருமதி.நாகி பொன்னன்.
யா/சா/7495 திருமதி.சின்னம்மா சுப்பிரமணியம்.
யா/சா/7496 திரு.முருகன் வெள்ளையன்.
யா/சா/7497 திரு.கந்தர் சுப்பிரமணியம்
யா/சா/7508 திரு.சிதம்பரநாதன் சிவசண்முகநாதன்.
யா/சா/7517 திருமதி.சின்னப்பிள்ளை கந்தன்.
யா/சா/7521 திரு.சங்கரன் சபாரத்தினம்.
யா/சா/7533 திரு.கதிர்காமு சின்னத்தம்பி.
யா/சா/7540 திரு.ஆறுமுகம் தம்பையா.
யா/சா/7541 திரு.முருகன் சடையன்.
யா/சா/7545 திரு.வல்லி முருகன்.
யா/சா/7556 திரு.வல்லி கந்தையா.
யா/சா/7562 திரு.நிலையினார் மனோகரன்.
யா/சா/7567 திரு.கந்தையா சிவசம்பு.
யா/சா/7576 திரு.சதாசிவம் பொன்னுத்துரை.
யா/சா 7590 திருமதி.அன்னலட்சுமி கதிரவேலு.
யா/சா/7596 திரு.பரமு தாமோதரம்பிள்ளை.
யா/சா/7616 திரு.முருகன் வேலன்.
யா/சா/7625 திரு.வல்லிபுரம் கதிரவேலு.
யா/சா/7636 திருமதி.சின்னத்தங்கம் அருணாசலம்.
யா/சா/7645 திருமதி.தெய்வானை முருகேசு.
யா/சா/7650 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
யா/சா/7661 திரு.வைரமுத்து பொன்னுத்துரை.
யா/சா/7670 திரு.பாலன் மொறின் செல்லையா.
யா/சா/7681 திரு.குமாரவேலு பாலசிங்கம்.
யா/சா/7690 திரு.சின்னப்பொடியன் வல்லிபுரம்.
யா/சா/7693 திருமதி.அன்னம்மா சிவகுரு.
யா/சா/7720 திரு.அப்பாக்குட்டி சுப்பிரமணியம்.
யா/சா/7725 திரு.பொன்னம்பலம் கனகசபை.
யா/சா/7726 திருமதி.செல்லம்மா சிவகுரு.
யா/சா/7730 திருமதி.வள்ளிப்பிள்ளை வேலன்.
யா/சா/7735 திருமதி.சிவபூரணம் செல்லத்துரை.
யா/சா/7752 திரு.வைத்திலிங்கம் நாகமுத்து.
யா/சா/7763 திருமதி.செல்வநாயகி சுப்பிரமணியம்.
யா/சா/7771 திரு.ஆறுமுகம் மயில்வாகனம்.
யா/சா/7774 திரு.ஆசைப்பிள்ளை இராசரத்தினம்.
யா/சா/7777 திரு.நாகலிங்கம் தர்மேந்திரன்.
யா/சா/7794 திரு.சுப்பையா சிவகுரு.
யா/சா/7795 திரு.செல்வரத்தினம் இராசகோபால்.
யா/சா/7799 திருமதி.பாக்கியம் முருகேசு.
யா/சா/7805 திரு.இராஜகிருஸ்ணன் தம்புஇராசையா.
யா/சா/7817 திரு.வைத்தியலிங்கம் வாமதேவன்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/சா/7822 திருமதி.இரத்தினம் சின்னையா.
யா/சா/7825 திரு.சின்னர் மாணிக்கம்.
யா/சா/7830 திரு.பொன்னம்பலம் பரமசாமி.
யா/சா/7832 திருமதி.சற்குணம் சுப்பையா.
யா/சா/7838 திருமதி.சகுந்தலாதேவி பாலசிங்கம்.
யா/சா/7847 திரு.வேலன் கந்தையா.
யா/சா/7854 திருமதி.ஜெயபாக்கியம் யோன்ராஜா.
யா/சா/7859 திரு.இளையதம்பி நடராசா.
யா/சா/7866 திரு.கந்தையா செல்லையா.
யா/சா/7867 திரு.ஜோய்தேவசகாயம் குணரத்தினம்.
யா/சா/7869 திருமதி.நாகபூசணி சின்னத்தம்பி.
யா/சா/7871 திருமதி.இராபூபதி கார்த்திகேசு
யா/சா/7873 திரு.சின்னப்பு பிள்ளையினார்.
யா/சா/7879 திருமதி.சோதி தம்பு.
யா/சா/7881 திரு.விசுவலிங்கம் கார்த்திகேசு.
யா/சா/7902 திருமதி.அருளேஸ்வரி பொன்னுத்துரை
யா/சா/7920 திரு.வேலன் சின்னத்தம்பி.
யா/சா/7923 திரு.முத்து மயில்வாகனம்.
யா/சா/7938 திரு.சேனாதிராசா செல்வரத்தினம்.
யா/சா/7969 திரு.செல்லத்துரை வேலாயுதர்.
யா/சா/7982 திரு.சிதம்பரன் செல்லன்.
யா/சா/7983 திருமதி.நல்லம்மா சின்னத்தம்பி.
யா/சா/7993 திருமதி.தங்கம்மா சின்னத்தம்பி.
யா/சா/8008 செல்வி.கனகம்மா தம்பையா.
யா/சா/8014 திருமதி.மனோன்மணி மூத்ததம்பி.
யா/சா/8023 திரு.வைரமுத்து கந்தையா.
யா/சா/8030 திரு.காங்கேசு கார்த்திகேசு.
யா/சா/8032 திரு.வீரவாகு குலசேகரம்.
யா/சா/8039 திருமதி.சரஸ்வதி தம்பு.
யா/சா/8054 திருமதி.பூரணம்மா நடராசா.
யா/சா/8067 திரு.வல்லிபுரம் கிருஸ்ணசாமி.
யா/சா/8080 திரு.வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை.
யா/சா/8082 திருமதி.ஈஸ்வரி சுப்பிரமணியம்.
யா/சா/8095 திரு.முத்தையா குமாரசாமி.
யா/சா/8101 திரு.சுப்பிரமணியம் தங்கமணியம்.
யா/சா/8102 திரு.இராமு சிதம்பரப்பிள்ளை.
யா/சா/8109 திரு.கதிரன் சிவண்டியான்.
யா/சா/8114 திருமதி.அன்னலட்சுமி நடராசா.
யா/சா/8127 திரு.சின்னவன் வேலுப்பிள்ளை.
யா/சா/8129 திரு.சின்னையா செல்லையா.
யா/சா/8132 திரு.கந்தன் நாகன்.
யா/சா/8134 திரு.கணபதி நாகப்பன்.
யா/சா/8139 திருமதி.உமையாத்தை தங்கராசா.
யா/சா/8155 திரு சுப்பன் சின்னத்தம்பி.
யா/சா/8191 திரு.கணபதி வேலுப்பிள்ளை.
யா/சா/8207 திருமதி.இளையபிள்ளை கந்தன்.
யா/சா/8212 திருமதி.பூரணம் இராமசாமி.
யா/சா/8220 திருமதி.இராசலட்சுமி நடராசா.
யா/சா/8223 திருமதி.செல்லம்மா செல்லையா.
யா/சா/8224 திரு.அப்பாக்குட்டி செல்லத்துரை.
யா/சா/8257 திருமதி.தங்கம்மா வைரமுத்து.
யா/சா/8264 திரு.சின்னத்தம்பி மயில்வாகனம்.
யா/சா/8266 செல்வி.பூரணம் தம்பையா.
யா/சா/8268 திருமதி.சோதிப்பிள்ளை ஜயாத்துரை.
யா/சா/8279 திரு.செல்லையா தம்பிப்பிள்ளை.
யா/சா/8280 திரு.வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/சா/8286 திருமதி.செல்லம்மா சதாசிவம்.
யா/சா/8294 திரு.சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/சா/8305 திரு.மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை.
யா/சா/8314 திரு.கணபதிப்பிள்ளை இளையதம்பி.
யா/சா/8332 திரு.செல்லப்பா விநாயகமூர்த்தி.
யா/சா/8333 திரு.யோசெவ்ப் அந்தோனிப்பிள்ளை.
யா/சா/8347 திரு.பொன்னையா கணபதிப்பிள்ளை.
யா/சா/8350 திரு.கார்த்திகேசு செல்லையா.
யா/சா/8353 திரு.தம்பையா காசிநாதர்.
யா/சா/8356 திருமதி. மீனாட்சிப்பிள்ளை செல்லப்பா.
யா/சா/8371 திருமதி.மனோன்மணி பர்ணாண்டோ.
யா/சா/8372 திருமதி.தெய்வானை கந்தையா.
யா/சா/8408 திரு.வேலுப்பிள்ளை சோமசுந்தரம்.
யா/சா/8459 திரு.சின்னத்தம்பி கந்தையா.
யா/சா/8462 திரு.சுப்பையா சபாரத்தினம்.
யா/சா/8469 திரு.பூதன் கிட்டிணன்.
யா/சா/8482 திரு.சிதம்பரநாதர் சிவசுப்பிரமணியம்.
யா/சா/8483 திரு.வைரமுத்து சின்னத்தம்பி.
யா/சா/8487 திரு.பரமு தியாகராசப்பிள்ளை.
யா/சா/8488 திரு.சீனிவாசகம் சிவபாதசுந்தரம்.
யா/சா/8495 திருமதி.நாகம்மா சின்னத்துரை.
யா/சா/8505 திரு.வீரகத்தியார்நடராசா சோமசுந்தரம்.
யா/சா/ 8508 திரு. சுப்பிரமணியம் யோகசுந்தரம்.
யா/சா/ 8510 திரு.கந்தராசக்குருக்கள் சச்சிதானந்தக்குருக்கள்.
யா/சா/8516 திரு.நாகமுத்து சின்னத்துரை.
யா/சா/8518 திரு.தம்பு தம்பிப்பிள்ளை.
யா/சா/8519 திரு.கந்தர் வல்லிபுரம்.
யா/சா/8521 திரு.நாகமுத்து கதிரவேலு.
யா/சா/8530 திரு.வேலுப்பிள்ளை சரவணை.
யா/சா/8543 திரு.கதிரவேலு திருநாவுக்கரசு.
யா/சா/8554 திரு.மூத்ததம்பி பூதந்தம்பி.
யா/சா/8566 திரு.வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/சா/8571 திருமதி. சல்லம்மா கிட்டினன்.
யா/சா/8581 திரு.கணபதிப்பிள்ளை சுவாமிநாதன்.
யா/சா/8585 திரு.கணபதி சுந்தரம்.
யா/சா/8594 திரு.சின்னத்தம்பி கணபதி.
யா/சா/8599 திருமதி.செல்லம்மா கந்தசாமி.
யா/சா/8620 திரு.கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்.
யா/சா/8622 திரு.வைத்திலிங்கம் கனகசுந்தரம்.
யா/சா/8646 திரு.கென்றி பசுபதி.
யா/சா/8664 திரு.சுப்பர் கணபதிப்பிள்ளை.
யா/சா/8679 திரு.வாரித்தம்பி சிவஞானம்.
யா/சா/8701 திருமதி.புவனேஸ்வரி சுந்தரம்பிள்ளை.
யா/சா/8704 திரு.செல்வநாயகம் கணேசலிங்கம்.
யா/சா/8713 திருமதி.கண்மணி கனகரத்தினம்.
யா/சா/8717 திரு.செல்லையா பூபாலசிங்கி.
யா/சா/8720 திருமதி.சின்னம்மா கந்தையா
யா/சா/8725 திரு.கதிர்காமு கணபதிப்பிள்ளை.
யா/சா/8730 திருமதி.தையல்முத்து தில்லைநாதன்
யா/சா/8744 திரு.பொன்னையா பெரியதம்பி.
யா/சா/8748 திருமதி.சிவக்கொழுந்து நாகரத்தினம்.
யா/சா/8758 திருமதி.சின்னம்மா வேலுப்பிள்ளை.
யா/சா/8763 திருமதி.சிவஞானம் கந்தையா.
யா/சா/8780 திரு.சுப்பிரமணியம் கந்தையா.
யா/சா/8782 திரு.கதிரன் சின்னத்தம்பி.
யா/சா/8790 திரு.வல்லிபுரம் பேரின்பநாயகம்.
யா/சா/8795 திருமதி.லீலாமணி மாணிக்கவாசகர்.
யா/சா/8811 திருமதி.பூரணம் சின்னத்தம்பி.
யா/சா/8823 திரு.காசிப்பிள்ளை இராசையா.
யா/சா/8860 திரு.தோமஸ்போஜேப் தருமரத்தினம்பேசியேல்
யா/சா/8861 திரு.நாகநாதி கணபதிப்பிள்ளை.
யா/சா/8884 திரு.சரவணமுத்து கனகசபை.
யா/சா/8892 திருமதி.இராசம்மா சுப்பிரமணியம்.
யா/சா/8922 திருமதி.வள்ளியம்மை ஆறுமுகம்.
யா/சா/8930 திரு.வேலன் கந்தசாமி.
யா/சா/8933 திரு.செபஸ்தி சூசை.
யா/சா/8951 திரு.கொத்தன் கறுவல்.
யா/சா/8976 திரு.வீரகத்தி பொன்னையா.
யா/சா/8985 திருமதி.செல்வராணி அந்தோனிப்பிள்ளை.
யா/சா/9023 திருமதி.கமலாம்பிளை வேலாயுதபிள்ளை.
யா/சா/9025 திரு.சிவசுப்பிரமணியம் துளசிங்கம்.
யா/சா/9028 திரு.சுப்பிரமணியம் அரியரத்தினம்.
யா/சா/9030 திரு.பொன்னுச்சாமி மயில்வாகனம்.
யா/சா/9034 திரு.வீரகத்தி சண்முகசுந்தரம்.
யா/சா/9055 திருமதி.நல்லம்மா சுப்பிரமணியம்.
யா/சா/9088 திரு.கணபதி குஞ்சன்.
யா/சா/9124 திருமதி.திரேசம்மா சிங்கராயர்.
யா/சா/9132 திரு.நல்லதம்பி குமரேசு.
யா/சா/9163 திருமதி.செல்லக்கண்டு கனகரத்தினம்.
யா/சா/9200 திரு.சின்னையா வீரசிங்கம்.
யா/சா/9230 திரு.சுங்கிலி ஆறுமுகத்தான்.
யா/சா/9245 திருமதி.அமிர்தரத்தினம் நடராசா.
யா/சா/9271 திரு.தாமோதரம்பிள்ளை கந்தவனம்.
யா/சா/9288 திரு.சின்னத்தம்பி துரைரத்தினம்.
யா/சா/9300 செல்வி.உமையம்மா கணபதிப்பிள்ளை.
யா/சா/9338 திருமதி.கனகம்மா நடுவிலான்.
யா/சா/9361 திரு.முத்தன் சிவலை.
யா/சா/9384 திருமதி.இலட்சுமி கதிரன்.
யா/சா/9406 திருமதி.கனகம்மா சுப்பிரமணியம்.
யா/சா/9408 திருமதி.கனகம்மா மயில்வாகனம்.
யா/சா/9409 திரு.கந்தன் சின்னத்தம்பி.
யா/சா/9448 திருமதி.இராசம்மா நமசிவாயம்.
யா/சா/9460 திரு.வேலன் சரவணமுத்து.
யா/சா/9480 திருமதி.மாணிக்கம் கந்தையா.
யா/சா/9511 திருமதி.தெய்வானைப்பிள்ளை தாமோதரம்பிள்ளை.
யா/சா/9546 திரு.சின்னப்பொடி கதிரவேலு.
யா/சா/9560 திருமதி.இலட்சுமி சின்னத்தம்பி.
யா/சா/9605 திரு.இளையதம்பி வேலுப்பிள்ளை.
யா/சா/9608 திரு.வல்லி வைத்திலிங்கம்.
யா/சா/9618 திரு.செல்லம்மா நடராசா.
யா/சா/9639 திரு.சாணையன் நாகமுத்தன்.
யா/சா/9653 திரு.சின்னத்தம்பி முருகேசு.
யா/சா/9659 திருமதி.சின்னம்மா கிட்டிணர்.
யா/சா/9660 திரு.பெரியதம்பி கணவதிப்பிள்ளை.
யா/சா/9661 திரு.வைத்திலிங்கம் சண்முகம்.
யா/சா/9664 திருமதி.செல்வராணி துரையப்பா.
யா/சா/9669 திரு.நன்னி பொன்னன்.
யா/சா/9689 திருமதி.பரமேஸ்வரி சோதிலிங்கம்.
யா/சா/9690 திருமதி.சோதியம்மா சின்னத்தம்பி.
யா/சா/9703 திரு.வயிரவன் செல்லன்.
யா/சா/9707 திரு.சின்னத்தம்பி சரவணை.
யா/சா/9712 திரு.நல்லதம்பி சோமசுந்தரம்.
யா/சா/9745 திருமதி.யோகம்மா சுப்பிரமணியம்.
யா/சா/9757 திரு.சின்னையா கந்தசாமி.
யா/சா/9759 திரு.சின்னப்பு சிவகுரு.
யா/சா/9761 திரு.இராமு ஆறுமுகம்.
யா/சா/9782 திரு.நாகமுத்து நாகராசா.
யா/சா/9794 திரு.காசிநாதர் கந்தையா.
யா/சா/9801 திரு.கதிரித்தம்பி இராசையா.
யா/சா/9809 திருமதி.தெய்வானைப்பிள்ளை சின்னத்துரை.
யா/சா/9816 திருமதி.சின்னாச்சி பொன்னு.
யா/சா/9820 திரு.சின்னத்தம்பி சரவணை.
யா/சா/9830 திரு.சின்னப்பொட்டை மயிலன்.
யா/சா/9836 திரு.பாலசிங்கம் ஜெயசிங்கம்.
யா/சா/9840 திரு.விநாசி வல்லி.
யா/சா/9865 திரு.சின்னையா கணேசு.
யா/சா/9885 திரு.இலங்கையர் சங்கரப்பிள்ளை.
யா/சா/9896 திரு.முருகப்பர் சின்னத்தம்பி குணரத்தினம்.
யா/சா/9904 திரு.நாகமுத்து செல்லத்துரை.
யா/சா/9913 திருமதி.பரமேஸ்வரி சபாபதி.
யா/சா/9919 திருமதி.வள்ளி சின்னவன்.
யா/சா/9931 திரு.சின்னத்தம்பி பொன்னுத்துரை.
யா/சா/9959 திருமதி.சீதாலட்சுமி சங்கரப்பிள்ளை.
யா/சா/9960 திரு.செல்லையா இராசையா.
யா/சா/9985 திருமதி.அன்னம்மா சரவணை.
யா/சா/9990 திரு.ஆறுமுகம் செல்லத்துரை.
யா/சா/10000 திரு.சிவலை இலட்சுமணன்.
யா/சா/10008 திருமதி.சைவநாயகி அருணாசலம்.
யா/சா/10014 திருமதி.சற்குணம் சின்னையா.
யா/சா/10017 திருமதி.இராசம்மா கணபதிப்பிள்ளை.
யா/சா/10020 திரு.கந்தையா நல்லையா.
யா/சா/10026 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/சா/10050 திரு.சின்னவன் பொன்னன்.
யா/சா/10057 திரு.காத்தான் வைரப்பன்.
யா/சா/10060 திருமதி.ஆச்சிப்பிள்ளை வைத்திலிங்கம்.
யா/சா/10114 திரு.சின்னத்தம்பி கந்தவனம்.
யா/சா/10119 திரு.முருகன் கிட்டிணன்.
யா/சா/10128 திரு.கட்டையன் சின்னத்தம்பி.
யா/சா/10133 திரு.பண்டாரி நாகன்.
யா/சா/10136 திரு.கந்தையா கார்த்திகேசு.
யா/சா/10154 திரு.காசிநாதர் சின்னத்தம்பி.
யா/சா/10168 திருமதி.ஆச்சிமுத்து மயில்வாகனம்.
யா/சா/10173 திரு.சின்னத்தம்பி குமாரசாமி.
யா/சா/10188 திரு.கணபதிப்பிள்ளை அரசமுடி.

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

### குலுக்கள் அடிப்படையில் தெரிவானோர்

யா/சா/41 திருமதி.நளாயினி அருணகிரிநாதன்.
யா/சா/60 திரு.பொன்னுத்துரை திருஞானசம்பந்தன்.
யா/சா/168 திரு.கட்டையன் கந்தன்.
யா/சா/584 திருமதி.புவனேஸ்வரி செல்வநாயகம்.
யா/சா/601 திரு.இராசையா பாக்கியநாதன்.
யா/சா/615 திரு.தம்பு நாகராசா.
யா/சா/713 திருமதி.விமலேஸ்வரி சுப்பிரமணியம்.
யா/சா/1009 திரு.வினாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி.
யா/சா/1155 திரு.சின்னையா விசயகுமார்.
யா/சா/1212 திரு.செல்லப்பா இராசரத்தினம்.
யா/சா/1354 செல்வன்.பீதாம்பரம் சுகுமார்.
யா/சா/1403 திரு.குமாரவேல் சந்திரசேகரம்.
யா/சா/1475 திரு.முருகேசு கனகசபை.
யா/சா/1621 திருமதி.பரமேஸ்வரி ரூபசிங்கம்.
யா/சா/1648 திருமதி.பத்மாவதி துரைராசா.
யா/சா/1696 திரு.இராசலிங்கம் நாகராசா.
யா/சா/1935 திருமதி.இந்திராணி ஸ்ரீதரன்.
யா/சா/2311 திரு.இளையதம்பி சிவராசமூர்த்தி.
யா/சா/2370 திருமதி.லலிதா இலட்சுமணன்.
யா/சா/2383 திரு.வைத்திலிங்கம் சற்குணநாதன்.
யா/சா/2838 திருமதி.தவமணி தங்கராசா.
யா/சா/2981 திரு.செல்லப்பா பரமேஸ்வரன்.
யா/சா/3055 திருமதி.கமலாம்பிகை விநாசித்தம்பி.
யா/சா/3057 திருமதி.பரமேஸ்வரி மார்க்கண்டு.
யா/சா/3154 திரு.பாலசுந்தரம் சிறிபாலசிங்கம்.
யா/சா/3199 திருமதி.சீதாதேவி சச்சிதானந்தன்.
யா/சா/3358 திரு.பேரம்பலம் சந்திரகாயன்.
யா/சா/3415 திருமதி.சரஸ்வதி யோகராசா.
யா/சா/3421 திரு.விநாசித்தம்பி குணசிங்கம்.
யா/சா/3423 திருமதி.வாரித்தம்பி சிதம்பரம்.
யா/சா/3464 திரு.சுந்தரம் கதிரவேலு.
யா/சா/3539 திரு.ஞானசேகரம் வாரித்தம்பி.
யா/சா/3596 திரு.தம்பு கந்தையா தெய்வேந்திரம்.
யா/சா/3626 திருமதி.இராசம்மா கயிலாயபிள்ளை.
யா/சா/3768 திருமதி.வள்ளிப்பிள்ளை சின்னத்துரை.
யா/சா/3836 திரு.தம்பிஜயா குமாரசாமி.
யா/சா/3845 திரு.சின்னையா அருளம்பலம்.
யா/சா/3848 திரு.சின்னத்தம்பி குமாரசாமி.
யா/சா/4284 திரு.சின்னத்தம்பி செல்லப்பா.
யா/சா/4344 திரு.ஐயம்பிள்ளை சின்னையா.
யா/சா/4430 திரு.கந்தையா யோகரத்தினம்.
யா/சா/4539 திரு.ஆசைப்பிள்ளை பாலசிங்கம்.
யா/சா/4623 திரு.குமார் துரைச்சாமி.
யா/சா/4763 திருமதி.அன்னலட்சுமி சின்னத்துரை
யா/சா/4765 திருமதி.நந்தினி சுப்பிரமணியம்.
யா/சா/4771 திருமதி.நல்லம்மா ஆனந்தம்.
யா/சா/4951 திரு.வயிரமுத்து திருத்தணிகாசலம்.
யா/சா/5282 திரு.மார்க்கண்டு செல்வரத்தினம்.
யா/சா/5362 திரு.வயிரவன் சின்னத்தம்பி.
யா/சா/5468 திரு.அருமைநாயகம் குருபரன்.
யா/சா/5485 திருமதி.மல்லிகாதேவி செல்வராசா.
யா/சா/5561 திரு.சுப்பிரமணியம் நடராசா.
யா/சா/5569 திருமதி.மீனாம்பிகை செந்தில்நாதன்.
யா/சா/5906 திரு.வல்லி அன்னராசா.
யா/சா/5916 திரு.சடையர் சுப்பிரமணியம்.
யா/சா/5989 திரு.கந்தையா பொன்னம்பலம்.
யா/சா/6050 திருமதி.பராசக்தி சிவசண்முகம்.
யா/சா/6221 திரு.சண்முகம் புஸ்பராசா.
யா/சா/6450 திருமதி.மல்லிகாதேவி வேலாயுதம்.
யா/சா/6506 திரு.சின்னவன் கந்தசாமி.
யா/சா/6712 திரு.கந்தப்பு பாலசுப்பிரமணியம்.
யா/சா/6751 திரு.வேலன் கந்தையா.
யா/சா/6906 திரு.சின்னத்தம்பி கனகசபை.
யா/சா/7069 திரு.நடராசா சிவராஜா.
யா/சா/7378 திரு.சின்னையா கந்தசாமி.
யா/சா/7550 திரு.சின்னத்தம்பி கந்தசாமி.
யா/சா/7566 திரு.வேலுப்பிள்ளை சுரேந்திரா.
யா/சா/7595 திருமதி.இராசம்மா குருநாதர்.
யா/சா/ 7621 திருமதி.கனகமணி சின்னத்துரை.
யா/சா/ 7806 திருமதி.பொன்மணி சிவராசா.
யா/சா/7901 திரு.அருணாசலம் தில்லைநாயகர்.
யா/சா/ 7995 திரு.வைத்திலிங்கம் சிதம்பரப்பிள்ளை.
யா/சா/8178 திரு.இளையதம்பி சுந்தரலிங்கம்.
யா/சா/8278 திரு.முத்து தில்லையம்பலம்.

தொடரும்

# பங்களாதேஷுடனான 2 ஆவது போட்டியிலும் சிறிலங்கா அணி வெற்றி!

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும் பங்களாதேஷிற்கும் இடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறிலங்கா அணி 75 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றி மூலம் நிர்ணயிக்கப்பட்ட மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் சிறிலங்கா அணி நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டியதன் மூலம் இரண்டிற்கு பூச்சியம் என்ற நிலையில் உள்ளது.

இந்த இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி நிர்ணயிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றி இலக்கான 296 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

சிறிலங்கா அணிசார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய உப்புள்தரங்க ஒருநாள்சர்வதேச போட்டியில் 105 ஓட்டங்களை பெற் றதன் மூலம் தனது முதலாவது சதத்தை பெற்றுள்ளதுடன் இந்த ஆட்டத்தின் சிறப் பாட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும், மகிழ ஜெயவர்த்தன ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களைப் பெற்றனர். சனத் ஜெயசூரிய 40 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சாளர் மொகமட் ராபிக் 47 ஓட்டங்களைக்கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சிறிலங்கா அணியின் பந்து வீச்சாளர் திலகரட்ணடில்சான் 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

-முத்தரப்பு கிரிக்கெட் போட்டி-

# நியூசிலாந்தை இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வென்றது!

(ஹராரே)

சிம்பாப்வேயில் நடைபெறும் முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து- இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 278 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நான்கு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இந்திய அணியின் வீரர் சையூப் ஆட்டமிழக்காது பெற்ற 110 ஓட்டங்கள் வெற்றிக்கு அடி கோலியது.

# அசாருடீனைக் கொல்லச் சதி; பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு!

(ஐதராபாத்)

முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் முகமட் அசாருடீனைக் கொல்லத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து அவருக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு அவரின் நடமாட்டத்திற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

பம்பாயைச்சேர்ந்த தாதாவான அபுசலீயின் கூட்டத்தினரே அசாருடீனைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கென ஐவர் கொண்டகுழுவொன்று ஐதராபாத் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அசாருடீனைக் கொல்வதற்கான முயற்சி ஏன் மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இதே வேளை அசாருடீனுக்கு தவித் இப்ராகிம் போன்ற பெரும் தாதாக்களுடன் தொடர்புகள் உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# சிம்பாப்வேயுடனான டெஸ்ட் போட்டியில் சச்சின் பங்கேற்க மாட்டார்!



காயம் காரணமாக சிம்பாப்வேயுடனான டெஸ்ட் தொடரில் டெண்டுல்கர் விலகியதையடுத்து ஐ.சி.சி சூப்பர் சீரிஸிலும் அவர் விளையாடுவாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் நச்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் முழங்கையில் ஏற்பட்ட காயத்துக்கு கடந்த மே மாதம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். அதன் பிறகு கிட்டத்தட்ட மூன்று மாதம் ஓய்வு எடுத்து வந்த அவர் சிம்பாப்வேயுடன் டெஸ்ட் தொடருக்கு ஆயத்தமாகும் வகையில் கடந்த மாதம் பயிற்சியை தொடங்கினார். இதற்கான அணியில் அவரும் இடம்பெற்றிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திடீரென அவர் விலகினார். காயம் முழுமையாக குணமடையாததால் தான் சிம்பாப்வே டெஸ்ட் தொடரில் ஆட விரும்பவில்லை எனக் கூறிவிட்டார்.

இதைத் தொடர்ந்து டெண்டுல்கர் அவுஸ்திரேலியா-உலக அணி இடையே அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஐ.சி.சி சூப்பர் சீரிஸ் தொடரிலும் விளையாடுவாரா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விரு அணிகள் இடையே ஒக்ரோபர் 5,7 மற்றும் ஒன்பது ஆகிய திகதிகளில் ஒரு நாள் போட்டியும் ஒக்ரோபர் 14,19 வரைஆறு நாள்கொண்ட ஒரு டெஸ்ட்டும் நடைபெறவுள்ளது. இதற்கான உலக லெவன் டெஸ்ட் மற்றும் உலக லெவன் ஒரு நாள் போட்டி என இரு அணியிலும் டெண்டுல்கர் இடம்பெற்றிருக்கிறார். ஒரு நாள் போட்டி அணிக்கு துணை அணித்தலைவராகவும் நியமிக்கப்பட்டுடிருக்கின்றார்.

ஆனால் அப்போட்டிக்கு உடல் தகுதி பெறுவதில் சிக்கல் நீடிக்கிறது. டெண்டுல்கர் காயத்தில் இருந்து குணமடைந்து முழுத் தகுதி பெற இன்னும் ஒரு மாதங்கள் ஆகும். எனவே அவர் ஒக்ரோபர் முதல் வாரத்தில் தொடங்கும் சூப்பர் சீரிஸில் பங்கேற்பது சந்தேகம் தான் என அணி மருத்துவர் ஆனந்த ஜோசி தெரிவித்துள்ளார். டெண்டுல்கர் ஆட முடியாமல் போனால் அவருக்குப் பதிலாக இன்சமாம்(பாகிஸ்தான்), மைக்கேல் வோகன் (இங்கிலாந்து) ஆகியோருக்கு உலக அணியில் இடம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

-ஆவரங்கால் ம.வி. கழகத்தின்-

# கரப்பந்தாட்டப் போட்டி கடந்த 31 இல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தி வரும் மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தச் சுற்றுப்போட்டியில் அன்றைய தினம் மாலை நான்கு மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி "ஏ அணி ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டு அணி ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டு அணிதன்னை எதிர்த்து விளையாடிய் கலைமதி பி" அணியை 20 என்ற சுற்றுக்கணக்கிலும்புத்தூர் கலைமதி "ஏ"அணிதன்னை எதிர்த்து விளையாடிய தொண்டமனாறு அண்ணாவிளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற சுற்றுக் கணக்கிலும் மற்றைய போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய சிறுப்பிட்டி சனசக்தி விளையாட்டுக் கழகத்தை 2-1என்ற ரீதியில் வெற்றிபெற்று அடுத்தசுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. (கீ)

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(அலுவலக செய்தியாளர்)

லெப்.கேணல் குணா ஞாபகார்த்த உதைப்பந்து,கப்டன் தினேஸ் நினைவான கரப்பந்துச் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையால் நடாத்தப்படும் மேற்படி இரு போட்களுக்கும் தென்மராட்சி, வடமராட்சிகிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் உள்ள விளையாட்டுக்கழகங்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விளையாட்டு இணைப்பாளர், தென்மராட்சி விளையாட்டு உத்தியோகத்தர், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம் ஆகிய முகவரிகளுக்கு அனுப்பி வைக்கும்படி கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (சு)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் மூன்றாம் சுற்றில் சானியா

கிராண்ட் ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்



நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றுப்போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சா தரவரிசையில் 81 ஆவது இடத்தில் உள்ள இத்தாலியின் மரியா எலினா கேமரினை எதிர்த்து விளை யாடினார். தொடக்கத்தில் சானியாவின் ஆதிக்கமே காணப் பட்டது. இவரது வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய கேமரின் முதல் செட்டில் எளிதில் தோல்வியடைந்தார்.

ஆனால் இரண்டாவது செட்டில் இவர் சுதாரித்து ஆட சானியாவுக்கு நெருக்கடி ஆரம்பித்தது. வெறும் 31 நிமிடத்தில் கேமரின் இரண்டாவது செட்டை கைப்பற்றினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் கடும் போட்டி நிலவியது.

இதில் கடுமையான கால் வலியிலும் சானியா முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றியை தனதாக்கினார்: இவர் 6-4,1-6, 6-4 என்ற செட்களில் கேமரினை போராடி வென்றார். மூன்றாவது சுற்றில் சானியா மிர்சா தர வரிசையில் 43 ஆவது இடத்தில் உள்ள பிரான்சின் மரியன் பர்டோலியை எதிர்த்து விளையாடுகிறார்.

மற்றப் போட்டிகளில் முன்னணி வீராங்கனைகள் எளிதில் வெற்றி பெற்றனர். முதல் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6-1, 6-0 என்ற எளிய செட்கணக்கில் மடகாஸ்கரின் டேலி ரான்டிரியன்டி பியையும் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம் 6-1,6-3 என்ற செட்களில் ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவையும் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 6-2, 6-2 என்ற செட்களில் கொலம்பியாவின் கேடலினா கேஸ்டனோவையும், பெல்ஜியத்தின் கிம்கிளைஸ்டர்ஸ் 7-5, 6-0 என்ற செட்களில் கொலம்பியாவின் ஜுலாகாவையும் வீழ்த்தினார்.

-அமெ.ஓபன் டென்னிஸ்-

# ராபெல் நாடல் முன்னேற்றம் பயஸ்ஜோடி வெளியேற்றம்

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றுப் போட்டியில் ஸ்பெயினின் முன்னணிவீரர் ராபெல் நாடல் 6-4, 7-5, 6-4 என்ற நேர்செட்களில் அமெரிக்காவின் ஸ்கோவில்லி ஜென்கின்சை வென்றார். முன்னதாக நடந்த முதல் சுற்றில் அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட் 6-1, 6-2, 6-1 என்ற செட்களில் ஸ்பெயினின் ஆல்பர்ட் கோஸ்டாவையும் அமெரிக்காவின் டெய்லர் டென்ட் 6-3, 3-6, 6-1, 6-4 என்ற செட்களில் ஜேர்மனியின் லார்ஸ் பர்க்ஸ் முல்லரையும் வென்றனர்.

இதற்கிடையில் அமெரிக்க ஓபன் ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில் ஏழாம் நிலை ஜோடியான இந்தியாவின் மகேஷ் பூபதி, செக் குடியரசின் மார்ட்டின் டாம், பிரான்சின் கெல் மோன்பீல்ஸ் சைரில் சால்னியர் ஜோடியை எதிர்த்து விளையாடியது. முதல் செட்டை எளிதில் கைப்பற்றிய மகேஷ் ஜோடி இரண்டாவது செட்டிலும் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 6-1, 6-3 என்ற நேர் செட்களில் பிரான்ஸ் ஜோடியை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. இந்தியாவின் மற்றொரு நட்சத்திர வீரரான லியாண்டர்பயஸ் முதல் சுற்றிலேயே வெளியேறி ஏமாற்றம் அளித்தார். செர்பியாவின் நீனட் ஜிமோன்ஜிக்குடன் இணைந்து விளையாடி இவர் 6-7, 6-7 என்ற செட்களில் அமெரிக்காவின் அமெர்டெலிக், ஜெப் மோரிசன் ஜோடியிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

# ஆசிய டேபிள் டென்னிஸ் மேத்தா அபாரம்

ஜேஜு ஆசிய டேபிள் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் பதிக்மேத்தா அபார வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

தென்கொரியாவின் ஜேஜு தீவில் ஆசிய டேபிள் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. இதில் இந்தியாவின் பதிக்மேத்தா முன்னணி வீரரான ஹொங் கொங்கின் சியங்யங்கை எதிர்த்து விளையாடினார். விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் சிறப்பாக ஆடிய மேத்தா 7-11, 11-5,11-6, 11-9,12-10 என்ற கணக்கில் வெற்றிபெற்றார். மற்றொரு இந்திய வீரரான சுபாஜித் சாஹா 11-9,11-5,11-4,11-7 என்ற நேர் செட்களில் சிங்கப்பூரின் லீஹன்டினியை வீழ்த்தினார்.

## சிந்தனைக்கு



விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை, எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தமிழரின் கோரிக்கை!

கிளிநொச்சியில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு பெரும் எழுச்சியுடன் நடந்து முடிந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத் தைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் பங்கேற்று தமிழ்மக்களின் உணர்வெளிச்சிகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிக்காட்டியுள்ளனர்.

யூலை மாதஇறுதியில் வவுனியா தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் பேராளர்கள் வெளியிடப்பட்ட தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையிலும், சிறிலங்கா அரசு இனப்பிரச் சினைக்குத் தீர்வொன்றை முன்வைக்க அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரியும் இவ்வெழுச்சிமாநாடு நிகழ்ந் தேறியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழ்மக்களின் கௌரவமான வாழ்விற்கு வழிசெய்யும் தீர்வொன்றை ஏற்படுத்தும் வகையில் சிறிலங்கா அரசுமீது அழுத்தங் களைக்கொடுக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்பதே இம்மாநாட்டில் தமிழ்மக்கள் வலியுறுத்தியுள்ள கோரிக்கையாகும்.

தமிழ் மக்களும் காலத்திற்குக் காலம் அவர்களுக்குத் தலைமைதாங்கியவர்களும்- தமிழ்மக்களின் உரிமை தொடர்பாக பல மாநாடுகளை நடத்தியுள்ளனர். சிறிலங்கா ஆட்சியாளர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்..

இம்மாநாட்டுத் தீர்மானங்கள், அன்றைய அரசியல் சூழ்நிலை: அரசியல் யதார்த்தம் என்பனவற்றின் அடிப்படையிலும், தமிழ்மக்கள் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள், அவற்றின் இலக்குகள் என்பனவற்றை வெளிப்படுத்துபவையாக இருந்தன.

இந்தவகையில் வவுனியாவில் தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து உடன் வெளியேறவேண்டும் எமது இறைமையை சர்வதேசமூலம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு தமிழ்மக்கள் தமது சுதந்திரவாழ்வை நோக்கி அணிதிரளவேண்டும் எனவும் மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இப்பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டதற்கு ஏற்வகையில் தமது சுதந்திரத்திற்காகவும், சுயநிர்ணயத்திற்குமாகவும் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் அணிதிரண்டெழுந்து வந்த தமிழ்மக்கள் தமது உரிமைக்கான கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர். சர்வதேசம் தமக்கு நீதி வழங்க முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகாலத்தில் சிறிலங்கா அரசு தமது உரிமைகளை அங்கீகரிக்கவேண்டும், வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னெடுத்த தமிழ் மக்கள் தற்பொழுது சர்வதேசம் இறைமையை அங்கீகரிக்கவேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படவேண்டும் என விடுத்துள்ள கோரிக்கையானது தமிழ்மக்களின் உரிமைப்போராட்டம் இலங்கைக்குள் உட்பட்ட பிரச்சினை என்ற கட்டத்தைத் தாண்டி விட்டது என்ற யதார்த்தத்தின் வெளிப்பாடே ஆகும்.

அதாவது தமிழ்மக்கள் தற்பொழுது வேண்டிநிற்பது சர்வதேச அங்கீகாரத்தையே ஆகும். ஏனெனில் இன்றைய யதார்த்தத்தின்படி தமிழ்மக்கள் தமது தாயகத்தின் பெரும்பகுதியாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டதான ஒரு அரசை உருவாக்கி, நிர்வகிக்கும் நிலையை அடைந்துவிட்டனர். அவர்கள் தற்பொழுது தமது உரிமைகளைச் சிங்கள ஆட்சியாளர்களிடம் கோரிப்பெறும் நிலையில் இல்லை.

ஆகையினால் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வொன்றைக் காண வேண்டுமானால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தையும் தமிழீழத் தேசியத்தலைமை போதிய அளவில் வழங்கியுள்ளது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் அதிகாரப் போட்டியில் அக்கறை காட்டுகின்றனரே ஒழிய தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவோ அவற்றின் தீர்வு தொடர்பாகவோ அக்கறை காட்டுவதாக இல்லை.

இந்நிலையில் தான் இனப்பிரச்சினை தீர்வில், சர்வதேச சமூகம் தனக்குரிய பணியை ஆற்றவேண்டுமெனத் தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றனர். தமது உரிமைகளுக்கான அங்கீகாரத்தையும், பாதுகாப்பான வாழ்விற்கும் உறுதியளிக்கவேண்டும் எனவும் கோருகின்றனர். இதேசமயம் திரண்டெழுந்த தமிழ்மக்கள் வேறொன்றையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்கூறுகின்றனர். அதுவே தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பின்னால் தாம் அணிதிரண்டுள்ளார்கள் என்பதேயாகும். இதன்மூலம் தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டி அரசியற் தீர்வொன்றைக்கான சிறிலங்கா அரசாங்கம் முன்வராவிட்டால் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தலைமையில் தமது உரிமைகளைப் போராடிப்பெறத் தயாராகி விட்டார்கள் என்பதாகும்.

# இரண்டு இலட்சம் வாக்குகளை ஜே.வி.பி பெற்றால் அதன் நிபந்தனைகளுக்கு ஐ.தே.க கட்டுப்படும்

## - பிரதிச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

ஜே. வி. பி தனித்து நின்று சனாதிபதித் தேர்தலில் இரண்டு இலட்சம் வாக்குகளைப் பெறுமானால் அதன் நிபந்தனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உடன்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி மக்கள் மத்தியில் தமக்கு இருந்த செல்வாக்கு சரிந்துள்ளமையை அடுத்தே எவருக்காவது சனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது

இதன் அடிப்படையிலேயே அந்தக் கட்சி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வெளியிட்ட 15 வருட கொள்கையை சனநாயக மறுப்பு என அமைச்சர் மங்கள சமரவீர விமர்சித்தமையை கண்டித்தார்.இதன் மூலம் மங்கள சமரவீரவுக்கு தேசிய கொள்கை என்றால் என்ன என்பது புரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஐ.நா. பொதுச் சபைக்கூட்டத்தில் அமைதி முயற்சி குறித்து சந்திரிகா உரை!

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அடுத்தவாரம் அமெரிக்கா செல்லவுள்ளார். அங்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் ஆகியோரையும் மற்றும் உலக நாடுகளின் தலைவர்களைச்சந்திக்க வுள்ளார். ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள் வதற்காகவே சனாதிபதி அமெரிக்கா செல்கிறார்.அவருடன் வெளிவிவகார அமைச்சர் அநுரபண்டார நாயக்க, நிதியமைச்சர் சரத் அமுனுகம, அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் செல் வதற்கு ஏற்பாடாகியுள்ளது. அடுத்த மாதம் 14 முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐநா. பொதுச் சபைக் கூட்டத்தில் சனாதிபதி15ஆம் திகதி விசேட உரை யொன்றை ஆற்றவுள்ளார். இலங்கை யின் அமைதி முயற்சிகள் குறித்து இந்த உரையின்போது சனாதிபதி முக்கிய மான பல விடயங்களைச் சுட்டிக்காட் டுவார் என எதிர்பார்க்கப் படுகிறது. ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் உலக நாடுகளின் தலைவர்களையும் சனாதிபதி சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நியூயோர்க்கிலுள்ள இலங்கைக்கான ஐ.நா. நிரந்தர வதிவிட அலுவலகம் மேற்கொண் டுள்ளது.

# சுதந்திரக் கட்சியின் தேர்தல் கொள்கை செவ்வாய் வெளியாகும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை பிரதம மகிந்த ராஜபக்ஷ வெளியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் எதிர்வரும் செவ்வாய்கிழமை அன்று கட்சியின் 54 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் வெளியிடப்படும் என கட்சியின் பொதுச்செயலர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.இந்த அறிவித்தலானது நாட்டின் நலனை மையமாகக்கொண்டதாகத் அமையும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்கு கருத்துரைத்த அமைச்சர் மங்கள சமரவீர சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்கனவே இணைக்கட்சிகளை இணைத் துக்கொண்டு தமது சனாதிபதித் தேர்தல் முனைப்புகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். தமது கட்சியின் தேர்தல் பிரசாரமானது வெளிநாட்டு சக்திகளிடம் இருந்து நாட்டை காப்பதாகும் என்ற அடிப்படையில் அமைந்திருக்கும் என அவர் குறிப்பிட்டார். (32)

# ஊழியர் சங்கம் கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் 2000 பேரை புதிதாக வேலைக்கு அமர்த்துவது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபன பொது ஊழியர்சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலையில் புதிதாக ஆட்களை வேலைக்கு அமர்த்த முற்படுவது பொருத்தமற்றது என அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது. (32)

# புகையிரத சாரதிகள் வேலை நிறுத்தம் கடும்போக்கால் மோசமடைகின்றது!

(கொழும்பு)

சிறிலங்கா புகையிரத சாரதிகளின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்துப் புதிய சம்பள முறையை அறிமுகப்படுத்தக் கோரி சாரதிகள் நேற்று நான்காவது நாளாகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புகையிரத அமைச்சரும், புகையிரத சாரதிகள் சங்கமும் கடும் போக்கினைக் கடைப்பிடிப்பதனால் நிலைமை மோசமடைந்துள்ளது.

புகையிரத சாரதிகள் மீண்டும் சேவைக்கு வரும் வரை அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட மாட்டாது என்று போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை வேலை நிறுத்தத்தைக் கைவிடப் போவதில்லை எனப் புகையிரத சாரதிகள் சங்கம் கூறியுள்ளது.

வேலை நிறுத்தப்போராட்டம் தொடருமானால் சாரதிகள் சேவையை விட்டுச் சென்றவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தங்கள் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகளைப் பெற்றுத் தராது அவசர கால சட்டத்தைப் பயன்படுத்தி புகையிரத ஊழியர்களைக் கட்டுப்படுத்த முயலுமாயின் தாங்கள் ஏனைய தொழிற் சங்கங்களுடன் இணைந்து கடும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக புகையிரத ஊழியர்கள் சங்கம் எச்சரித் துள்ளது.

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்திட்டம் சிறிலங்கா-சீனா ஒப்பந்தம் கைச்சாத்து

## - வீதியிலிறங்கிப்போராட மக்கள் தயார்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் மையத்திட்டம் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கமும், சீன அரசாங்கமும் இணக்க ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளன.

சீனாவுக்கு விஜயம் செய்த சனாதிபதியினால் இதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

சீனாவுடன் பல்வேறு ஒப்பந்தங்கள் இந்த விஜயத்தின் போது செய்துக்கொள்ளப்பட்ட போதிலும் நுரைச்சோலை ஒப்பந்தமே முக்கியமானதாகக் கருதப்படுகிறது.இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர் வரும் ஒக்ரோபரில் நிர்மாணப் பணிகளை சீனா ஆரம்பிக்கவுள்ளது.

இதன் கீழ் டீசல் மூலம் தமது மின்சார உற்பத்தியை தவிர்த்து மின்சார உற்பத்தியை குறைந்த செலவில் மேற்கொள்ளமுடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே இந்தத் திட்டத்திற்கு பாரிய எதிர்ப்பு காட்டப்பட்டு வருகின்ற நிலையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டமை குறித்து நுரைச்சோலை சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் என சீன அதிகாரிகள் உறுதியளித்திருந்த போதும் தற்சமயம் அதனை மறுத்து ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது எனப் பாராளுமன்ற உறுப்பினர் கே ஏ பாயிஸ் தெரிவித் துள்ளார்.

எனவே மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவதே அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

(32)

# பேச்சுக்கான பொதுவான இடத்தை தெரிவு செய்வதில் நோர்வே தீவிரம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பேச்சுவார்த்தைக்கான இடத்தைத் தேர்வு செய்வதில் நோர்வேத் தரப்பு தீவிரம் காட்டி வருகின்றது.

இது குறித்து சிறிலங்கா நோர்வேத்தூதரகப் பேச்சாளர் கிர்ஸ்டி ஸ்ட்ரோம்சார்ட் கூறுகையில்; இரு தரப்பினருடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளோம்.இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இடத்தை தேர்வு செய்து வருகிறோம் என்றார் அவர்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இலங்கையில் யுத்த சூனியப் பிரதேசத்தில் அமைதிப் பேச்சுக்கள் நடாத்தப்படுவதை தேசியத் தலைமை நிராகரிப்பதாக விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலோ அல்லது தமிழீழ நிர்வாகப் பகுதியான கிளிநொச்சியிலோ பேச்சுக்கள் நடத்தலாம் என்று தயா மாஸ்டர் தெரிவித்திருந்தார். அதேபோல சனாதிபதித் தேர்தல் சிறிலங்காவில் நடைபெறவுள்ள நிலையில் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுவது குறித்து அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சந்தேகம் எழுப்பியிருந்தார். இந்நிலையில் ஒஸ்லோ அல்லது கிளிநொச்சியில் பேச்சுக்கள் நடாத்துவதை சிறிலங்கா அரசு நிராகரித்திருப்பதாக சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் கொழும்பில் அறிவித்திருந்தார். இதனையடுத்து புதிய இடம் ஒன்றைத் தேர்வுசெய்வதில் நோர்வேத் தரப்புதீவிரம் காட்டிவருகிறது.

-தீ விபத்தில் அழிவடைந்த-

# வர்த்தக நிலையங்களின் உரிமையாளருக்கு நிதியுதவி

தீவிபத்தில் அழிவடைந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதியுதவி வழங்கியுள்ளது.

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் தீவிபத்தினால் அழிவடைந்த பதினொரு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியினர் 25,000 ரூபா வீதம் நிதியுதவியினை வழங்கியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி சந்தை வளாகத்தில் இந்நிதியுதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிளி நொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், கரைச் சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம், தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறை வேற்றுப் பணிப்பாளர் றீகன், கிளி நொச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன். சந்தை வர்த்தகச் சங்கத் தலைவர், கிளி நொச்சி பிரதேச வர்த்தக சங்கத் தலைவர், யு.என்.டி.பி நிறுவனப் பிரதி நிதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

# சாரதி அனுமதிக்கான கணினி அட்டை வழங்கல்

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத் துத் திணைக்கள நடமாடும் சேவையின் போது சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் சாரதி அனுமதிப்பத்திர கணினி அட்டைகள் கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

மேற்படி சாரதி அனுமதிப்பத்திர கணினி அட்டைகள் எதிர்வரும் ஆறாம் திகதி முதல் கிளி. அரச செயலக மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதெனவும், கணினி சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ள வருகை தருபவர்கள் தேசிய அடையாள அட்டை, தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றுடன் அலுவலக நாட்களில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

-வவுனியா எழுச்சிப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும்-

# முல்லை தமிழ்தேசிய எழுச்சி நிகழ்விற்கு கூட்டுறவாளர்களுடன் கலந்துரையாடல்

(முல்லை)

வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக முல்லைத்தீவில் நடைபெறவுள்ள எழுச்சி நிகழ்விற்கான சகல கூட்டுறவாளர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் நேற்றுக் காலை 11.00 மணிக்கு எழுச்சிக் குழுத்தலைவர் இ. கிருஸ்ணபிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையினது கேட்போர் கூடத்தில் ஆரம்பமான இந்நிகழ்வில் எழுச்சி நிகழ்வு தொடர்பான கருத்துக்களை முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மோ.சிவமயம், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் வேதவனம், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் த.கனகரட்ணம், முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ. முரளி, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளார். செ. முகுந்தன் ஆகியோர் வழங்கினார்கள்.

ஆலோசனைகளையும். கருத்துக்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர் கள், தலைவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் பெருமளவு கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## புத்தர்...

பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளதுடன், நேற்று இருமணி நேரம் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருந்தது.

## 8000 வாக்காளர்...

வெளி ஆட்களுக்கு தேர்தல் செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்று விசாரணைகள் மூலம் அறிய வந்துள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த பெரேரா தெரிவித்தார்.

## ஐ.தே. க உறுப்பினர் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை தங்கொல்லப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 12-30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் வீட்டிற்கு சிறிது சேதம் ஏற்பட்ட போதும் எவரும் காயம் அடையவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

# எழுதுமட்டுவாளில் சக சிப்பாயால் இராணுவச் சிப்பாய் சுட்டுக்கொலை

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் சிறிலங்கா இராணுவ முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் சகசிப்பாய் ஒருவரால் நேற்று முன்தினம் மாலை சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ரத்திக்க ரொசான் குணரத்னா, (வயது -24) என்ற சிறிலங்கா இராணுவச் சிப்பாயே அவர் பணியில் இருந்த காப்பரணிலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் சிறிலங்காப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட சக சிப்பாயான ஜெயலத் என்பவர் நேற்றுக் காலை சாவகச்சேரி நீதிமன்றில் கொடிகாமம் பொலிசாரால் ஆஜர்செய்யப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் எட்டாம் திகதி வரை யாழ். சிறைச் சாலையில் விளக்கமறியலில் வைப்ப தற்கான உத்தரவை நீதியாளர் அபிறேம்சங்கர் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை தென்மராட்சியின் முன்ன ரங்கப் பகுதிகளில் இவ்வாறான உயிரிழப்புக்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (28,27)

# பொது வேட்பாளரை நியமிக்க உத்தேசம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தத் தீர்மானித்துள்ளன.

சிறிலங்கா முஸ்லிம்கட்சி, முஸ்லிம் தேசிய அமைப்பு, அஸ்ரப் காங்கிரஸ், ஐக்கிய முஸ்லிம் கட்சி ஆகிய நான்கும் இணைந்து இம்முறை சனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதாகத் தீர்மானம் எடுத்துள்ளன.

சனநாயக ஐக்கிய அமைப்பின் செயலாளர் சாகிர் நசீர் அகமட் இதனைத் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு...

சுடப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை- மோகன்

(குமாரசிங்கம்-குலமோகன், கடற்கரை வீதி கல்லுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு)

1990 ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை-மதன்

(அன்னத்துரை-மேகநாதன், காளி கோயில்வீதி தேவாபுரம் முறக்கொட்டான்சேனை- மட்டக்களப்பு)

வீரச்சாவை தழுவிக்கொண்ட இம் மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வெடிபொருட்கள் மீட்பு!

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்திலுள்ள மாவத்தகம, கொட்டிகாபொல என்ற இடத்தில் இருந்து பொலிசார் பல வெடி பொருட்கள் பலவற்றை மீட்டெடுத்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களில் மூன்று கைக்குண்டுகள், ஒரு கிளேமோர் குண்டு, 15 ரொக்கற் லோஞ்சர் குண்டுகள் மற்றும் ரீ 56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் ரவை 2,8002 உம் உள்ளடங்கும் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்ட இடத்தில் மூன்று மாதங்களிற்கு முன்னர் ஒரே நாளில் மூன்று கொலைகள் இடம்பெற்றிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர் .(32)

# பொலிஸ் அத்தியட்சகர் கொலை; 16 இல் அடையாள அணி வகுப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சிறிலங்கா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்த்தன கொலை தொடர்பான அடையாள அணி வகுப்பு வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக போராளி கே.பி. அவரது வீட்டில் வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இது தொடர்பாக கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்றம் விடுத்த தகவலிலேயே இவ்வாறு கூறியுள்ளது.

இதேவேளை சந்தேக நபர் பலத்தபாதுகாப்பின் மத்தியில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதேவேளை சந்தேக நபருக்கு ஒரு கை இல்லாத காரணத்தினால் அவர் இலகுவில் அடையாளம் காணப்படுவார் என நீதிமன்றம் தெரிவித்ததை அடுத்து ஒரு கையை இழந்தவர்கள் சிலரைத் தேடிப் பிடித்து இந்த சந்தேக நபருடன் அவர்களையும், அடையாள அணி வகுப்பிற்கு கொண்டு வருமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தமிழ்...

ஆல் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களுக்கு கூற வேண்டியேற்படும் என்றார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இரு பிரதான வேட்பாளர்களும் இதுவரை அவர்களின் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை என்று தெரிவித்திருக்கும் எம்.கே சிவாஜிலிங்கம் வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அவ்விருவரும் இது தொடர்பில் உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சு வார்த்தைகள் மூலம் எட்டப்படுமாயின் அது எந்த அடிப்படையில் என்பதை விவரித்து அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

## வடமராட்சி...

அனுமதிக்கப்பட்டனர்.

கடற்படையினரால் மோசமாக தாக்கப்பட்ட குடும்பஸ்தர்களான இருதயராஜா ஜேசுதாஸ் (வயது -28) மற்றும் அருட்பிரகாசம் அன்ரன் (வயது -34) ஆகிய இருவரும் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் தற்போது சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம் பெயர்ந்த மீனவக் குடும்பங்களை அதனையண்டிய வளலாய் சூனியப் பிரதேசத்தில் குடியமர்த்தவும் குறித்த மயிலிட்டியை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட அனுமதிப்பதாகவும் யாழ். மாவட்ட படைத்தலைமை அண்மையில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## இனப்பிரச்சினை...

தென்னிலங்கை அரசியல் சமூகம், தமிழ் தேசிய இனச்சிக்கலுக்குத் தீர்வுகாணாது என்பதைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவதில் எமது தேசியத் தலைமை மிகவும் பொறுமையுடன் அவதானமாகவே செயற்பட்டு வருகிறது.

இத்தகைய செயற்பாடுகள் அனைத்துமே தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற இலக்கினை நோக்கியதாகவே எமது தலைமையினால் நகர்த்தப்பட்டு வருகிறது.

இது உரியபலனை அளிக்கும் என்று நாம் நம்புகிறோம். விடுதலைப் புலிகளின் இந்த செயற்பாடுகளால் புலிகள் பலவீனமாக இருப்பதாக எண்ணுபவர்கள், தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை என்றும் கூறினார்.

## தேசவிரோதி...

அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கருணா குழுவுடன் தொடர்புடையவர் என்று, கூறப்படும் இவர் கடந்த ஏப்ரல் முதல் வெண்ணப்புவவில் வசித்து வந்தார்.

உந்துருளியில் வந்த இரண்டு இளைஞர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.